வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 16.12.2024 திங்கட்கிழமை இதழ் : 350 பக்கங்கள் : 12

# தமிழரசு எடுக்கும் முடிவுக்கு ஏனையோர் ஒத்துவரவேண்டும் என்பது முறையற்றது!

## ஒற்றுமையான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதே சிறந்தது என்கிறார் செல்வம் அடைக்கலநாதன்



**வவுனியா, டிசெம்பர் 16**

**தமிழரசுக்கட்சி கூடுதலான ஆசனங்களை பெற்றுவிட்டது என்பதற்காக அவர்கள் எடுக்கின்ற முடிவிற்கு ஏனையவர்கள் ஒத்துவரவேண்டும் என்று சொல்வது முறையற்றசெயல். தேர்தல் வெற்றிகளை வைத்து தீர்வு விடயத்தை பார்க்க முடியாது. சுமந்திரனுக்கும் இது தெரியும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

ஒற்றுமையான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கின்றபோதே எமது மக்களும் அதை விரும்புவார்கள். அந்த பலத்தின் மூலமே அரசாங்கத்தின் பார்வையை எமது பக்கம் திருப்ப முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்களை பொறுத்தவரை பல பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. எனவே இனப்பிரச்னை சார்ந்த விடயத்தில் ஒரு கட்சி எடுக்கும் முடிவுக்கு ஆதரவாக மற்றக் கட்சிகள் செல்வதென்பது சாத்தியமில்லை.

ஒன்றாக இணைந்து ஒரு மேசையில் இருந்து 11

# சிறீதரன் எம்.பி. கனடா பயணம்

*யாழ்ப்பாணம், டிசெ. 16*


இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கனடா நோக்கிப் பயணமாகியுள்ளார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சின் அழைப்பில் பேரில் அவர் அங்கு சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, கனடாவின் வெளிவிவகார அமைச்சின் இந்தோ - பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரதியமைச்சர் வெல்டன் எப்பை சந்தித்து உரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்பு கனடாவின் - ஒட்டோவாவில் உள்ள வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது

இதன்போது, பொறுப்புக்கூறல், இந்தோ - பசுபிக் பிராந்தியத்தின் சமகால 11



# ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கு புதுடில்லியில் சிறப்பான வரவேற்பு!

*புதுடில்லி, டிசெ. 16*

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இந்தியா சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட குழுவினருக்கு புதுடில்லியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய தகவல் தொழில்நுட்ப இணை அமைச்சர் கலாநிதி எல். முருகன், இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, இந்து சமுத்திர 11

# சமஷ்டி தீர்வை எட்ட இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகியுங்கள்!

## இந்தியப் பிரதமருக்கு கஜேந்திரகுமார் கடிதம்

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

இலங்கை ஜனாதிபதி இந்தியப் பிரதமரைச் சந்திக்கவுள்ள நிலையில் இலங்கையில் தமிழ் மக்களது இனப்பிரச்னைத் தீர்வாக ஒற்றையாட்சியை கைவிட்டு தமிழ்த் தேசம் அதன் இறைமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வை எட்ட இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

பொதுவாக கடந்த 75 ஆண்டுகால கொள்கைகளும், குறிப்பாக தீர்க்கப்படாத இனப்பிரச்னையும் இலங்கையை பொருளாதார ரீதியாக மட்டுமன்றி அரசியல் ரீதியாகவும் வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. இயற்கையாகவே, எதிர்காலம் கணிசமாக சிறப்பாக இருக்க வேண்டுமானால், எதிர்காலத்திற்கான கொள்கைகள் கணிசமாக வேறுபட்டிருக்க வேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு 36 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அது 11

# இந்தியாவுக்கு நேற்று மாலை புறப்பட்டார் ஜனாதிபதி அநுர!

## மோடியுடன் முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு

*கொழும்பு, டிசெ. 16*

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்பின்பின் தனது முதல் வெளிநாட்டு சுற்றுப்பயணமாக நேற்று பிற்பகல் இந்தியாவிற்கு சென்றுள்ளார்.

இந்திய அரசின் அழைப்பின் பேரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி நாளை வரை இந்தியாவில் தங்கியிருப்பார்.

இந்தச் சுற்றுப் பயணத்தின்போது இந்திய 11

# மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் நிச்சயம்!

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

*கொழும்பு, டிசெ. 16*

மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் நடத்துவதற்கு நாங்கள் தயாராகவுள்ளோம் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்மக்களின் பிரச்னைகளை அணுகுவதற்கு 11

# மீனவர்கள் நேரில் சந்தித்தால் பல பிரச்னைகளுக்குத் தீர்வு!

## துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவிப்பு

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

மீனவர்கள் நேரில் சந்திப்பது இதுவரை நடைபெறவில்லை. அது இடம்பெறுமாயின் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி தெரிவித்தார். 11

# காங்கேசன் - நாகை படகுச் சேவை ஜனவரியில் மீளவும் ஆரம்பிக்கிறது

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையிலான படகுச்சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் வாரத்துக்கு ஆறு நாட்கள் மேம்பட்ட வசதிகளுடன் ஆரம்பமாகவுள்ளதாக சுபம் குழுமத்தின் தலைவரும், காங்கேசன்துறை - நாகைப்பட்டனம் படகுச் சேவை முதலீட்டாளருமான பொன்னுசாமி சுந்தர் ராஜ் தெரிவித்தார். 11

# வங்கக் கடலில் குறைந்த காற்றமுத்த தாழ்வு பகுதி

*கொழும்பு, டிசெ. 16*

தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றமுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேலும் அந்த அமைப்பு மெதுவாக உருவாகி, மேற்கு வடமேற்கு நோக்கி நகர்ந்து, அடுத்த 2 நாட்களுக்கு வடக்கே தமிழக கடற்கரையை நோக்கி நகர வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 11

# புதிய சபாநாயகராக எதிரணியில் ஒருவர்?

*கொழும்பு, டிசெ. 16*

சபாநாயகர் பதவிக்காக எதிர்க்கட்சியிலிருந்து ஒருவரின் பெயர் முன்மொழியப்படவுள் ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே நளின் பண்டார இதனை கூறினார்.

அத்துடன் நாளை நடை பெறவுள்ள பாராளுமன்ற அமர் வில் அந்நபரின் பெயர் முன் மொழியப்படும் எனவும் நளின் பண்டார குறிப்பிட்டார். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பசாமிகள் எவ்வித தடங்கலுமின்றி சபரிமலைக்கு செல்வதற்கு நடவடிக்கை

## அடைக்கலநாதன் எம்.பி. உறுதி

வவுனியா, டிசெ. 16

வவுனியா ஐயப்ப சாமிகள் சபரிமலை யாத்திரைக்காக அவசரகால கடவுச்சீட்டு மற்றும் வீசா, விமான கட்டணம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கி, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் நேற்று மஜர் ஒன்றினை கைய ளித்தனர்.

அதில் கடவுச்சீட்டு மற்றும் வீசா பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுவதாகவும் அதற்கான ஏற்பாடுகளை செய்துதருமாறும் அவர்கள் கோரிக்கை முன்னைத்துள்ளனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஐயப்ப சாமிகள் எந்வொரு தடங்கலுமின்றி சபரிமலைக்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். (அ)

# குளத்தின் வான்பகுதியிலிருந்து அரச ஊழியரின் சடலம் மீட்பு!

வவுனியா, டிசெ.16

வவுனியா சேமமடு குளத்தின் வான்பகுதியில் இருந்து அரச ஊழியர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

குறித்த இளைஞன் வனஜீவ ராசிகள் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ள யானை வேலிகளை பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு வந்தவர்.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் மாலை குறித்த இளைஞன் சேமமடு குளத்தின் ஆற்றுப்பகுதிக்கு சென்றார். நீண்ட நேரமாகியும் அவரை காணாத நண்பர்கள் தேடியுள்ளனர்.

இந்த நிலையில், அவரது சடலம் நேற்றுக் காலை குறித்த ஆற்றுப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டது.

மகா றம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த நிரஞ்சன் என்ற அரச ஊழியரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ- 10)

# போர் பயிற்சியில் ஈடுபட இந்தியா சென்ற இலங்கை கடற்படைக் குழு

கொழும்பு, டிசெ. 16

இலங்கை கடற்படை மற்றும் இந்திய கடற்படைக்கு இடையிலான இருதரப்பு கடற்படை பயிற்சி நாளை முதல் 20ஆம் திகதி வரை இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ளது.

இந்த பயிற்சியில் பங்கேற்கும் இலங்கை கடற்படை கப்பல் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் இருந்து இந்தியாவை நோக்கி புறப்பட்டுச் சென்றது.

இந்திய மற்றும் இலங்கை கடற்படைகளுக்கிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக ஆண்டுதோறும் இந்திய - இலங்கை கடற்படை பயிற்சி நடத்தப்படுகிறது.

இதன்படி, இருதரப்பு கடற்படைப் பயிற்சியில் பங்கேற்பதற்காக இம்முறை கடற்படையின் குழுவொன்று இந்தியா சென்றுள்ளதாக கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# இஸ்ரேல் சென்ற இலங்கையர் குழுவை நாடு கடத்த தீர்மானம்!

கொழும்பு, டிசெ. 16

இஸ்ரேலுக்கு தொழிலுக்காகச் சென்று தொழில் ஒப்பந்தத்தை மீறிய 17 இலங்கையர்களை நாடு கடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாயத் துறைக்காக தொழில் விஸாவில் இஸ்ரேலுக்கு வந்த இவர்கள், பணியிடங்களை விட்டு தப்பிச்சென்று பேக்கரிகளில் பணிபுரியும் போது அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

இஸ்ரேல் வெளிநாட்டு பணியாளர்களை தொடர்ந்து அவதானித்து வரும் நாடு எனவும் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டுப் பணியாளர்கள் இஸ்ரேலில் பணிக்கு வந்த பின்னர் அவர்களது விஸா வகையை வேறு விசா வகைக்கு மாற்றுவதற்கான சட்டச் சூழல் இல்லை என இஸ்ரேல் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, தாதியர் பணிக்காக ஒரு வருடத்திற்கு முன்னர் இஸ்ரேலுக்கு வந்த இலங்கைப் பெண் ஒருவரும் சேவை நிபந்தனைகளை மீறிய தன் காரணமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக திருட்டு குற்றச்சாட்டில் சிக்கிய இலங்கையர் ஒருவரை நாடு கடத்த இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர். (அ)

# காரைநகர் கடலில் நீரில் மூழ்கிய இருவரை காப்பாற்றிய பொலிஸ்!

யாழ்ப்பாணம், டிசெ. 16

காரைநகர் கடலில் நேற்று மாலை நீரில் மூழ்கிய இருவர் பொலிஸ் உயிர்காக்கும் பிரிவினர் மற்றும் கடற்படையினால் காப்பாற்றப்பட்டனர்.

கசூரினா கடற்கரைக்கு வருகை தந்த யுவதி ஒருவரும், இளைஞர் ஒருவரும் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இதன்போது விரைந்து செயற்பட்ட பொலிஸ் உயிர்காக்கும் பிரிவினரும், கடற்படையினரும் நீரில் அடித்துச் செல்லப்பட்ட இருவரையும் காப்பாற்றியுள்ளனர்.

காப்பாற்றப்பட்ட யுவதிக்கு பாதிப்புகள் இல்லாத நிலையில் அவர் வீடு சென்றுள்ளார். மற்றைய இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தகுந்த நேரத்தில் விரைந்து செயற்பட்டு இரண்டு உயிர்களையும் காப்பாற்றிய, உயிர்காக்கும் பொலிஸ் பிரிவினருக்கும், கடற்படையினருக்கும் பலரும் பாராட்டுகளை தெரிவித்தனர். (அ-05)

# உணவகம் ஒன்றில் ஏற்பட்ட சண்டை; மூவர் வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, டிசெ. 16

வெலிப்பன்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிப்பன்ன களஞ்சிய சந்தி பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் உணவு பெறச் சென்றவர்களுக்கும் உணவக உரிமையாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் மூவர் காயமடைந்து களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெலிப்பன்ன பொலிஸார் தெரிவித்தனர்.

உணவு எடுப்பதற்காக மூன்று பேர் உணவகத்துக்குச் சென்றபோது கிடைத்த உணவு தொடர்பில் ஏற்பட்ட விவாதம் வாக்குவாதமாக மாறியதைத் தொடர்ந்து இந்த நிலைமை உருவாகியுள்ளது.

இதன்போது, கூரிய ஆயுதங்களைக் கொண்டு உணவக ஊழியர்கள் குறித்த மூவரையும் தாக்கியுள்ள நிலையில், காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் தாக்குதலை மேற்கொண்ட மூவர் வெலிப்பன்ன பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் வெலிபன்ன, தெனியாய மற்றும் இத்தபான பிரதேசங்களைச் சேர்ந்த மூவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களை கண்டறிய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

# ஐ.நா. உதவிச்செயலர் பிரதமருடன் சந்திப்பு!

கொழும்பு, டிசெ. 16

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதுவரகத்தின் அகதிகளுக்கான உதவி தூதுவரும், ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளருமான ருவேந்திரினி மெனிக்திவெல பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின்போது இலங்கையில் அகதிகள் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதுவரகத்தின் அர்ப்பணிப்பு மற்றும் கணிசமான பங்களிப்புகளுக்கு பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் ஐ.நா அகதிகளுக்கான தூதுவர் இலங்கை அலுவலகத்தின் தலைவர் சஞ்சிதா சத்தியமூர்த்தி இணைந்துகொண்டார்.

அத்துடன் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் பி. டபிள்யூ.ஜி.சி. சாகரிகா போகஹவத்த மற்றும் வெளி விவகார அமைச்சின் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தயானி மெண்டிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல்

# வேட்புமனு இரத்து சட்டங்களை திருத்தும் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 16

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பிலான அண்மைய சட்டத் திருத்தங்கள் அடுத்த சில வாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பான சட்டங்களை திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்தகைய பணிகளை சட்ட வரைவுத் துறை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 10 இலட்சம் புதிய வாக்காளர்கள் வாக்களிக்க முடியும் என்று அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான 8,711 வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுக்கள் கோரப்பட்டன.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 80,672 வேட்பாளர்கள், 24 மாநகர சபைகள், 41 மாநகர சபைகள் மற்றும் 275 பிராந்திய சபைகளுக்கு வேட்புமனு தாக்கல் செய்தனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்தவர்களின் சுமார் மூவாயிரம் அரச ஊழியர்களும் உள்ளனர்.



வேட்புமனுக்களை சமர்ப்பித்த இந்த வேட்பாளர்களில் சுமார் எட்டாயிரம் பேரில் பலர் உயிரிழந்துள்ளதுடன் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 16

கல்கிஸை - அத்திடிய பிரதேசத்தில், கல்கிஸை குற்றத் தடுப்பு பிரிவினர் முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பில், ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபரிடம் இருந்து 101 கிராம் 380 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் 50 கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவத்தில் 34 வயதான, தெஹிவளை பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கல்கிஸை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 16.12.2024 திங்கட்கிழமை ඊළනාඩු
பிலவ வருடம், மார்கழி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இந்தியாவால் முடியாததைக் கேட்பது

ஒற்றையாட்சியை கைவிட்டு, தமிழர் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வை எட்டுவதற்காக, இலங்கையின் மீது அழுத்தங்களை பிரயோகிக்குமாறு, இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதுவதால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்பட்டப் போவதில்லை. இதற்கு மாறாக, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குங்கள் - மாகாண சபை முறைமையை இல்லாமலாக்குங்கள். ஏனெனில் அது நாட்டிற்கு பயனற்றது என்று கூறிவரும் மிலிந்த மொறகொட மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ போன்ற சிங்கள கடும்போக்குவாதிகளே, இவ்வாறான செயல்பாடுகளால் நன்மையடைவர்.

கடந்த காலத்தில் வடக்கில் முன்னெடுக்கப்பட்ட 13 - எதிர்ப்பு நடவடிக்கைகள் தென்னிலங்கைக்கே பயன்பட்டிருக்கின்றது. அநுர குமார திஸநாயக்க புதுடில்லியில் நிற்கும்போது, இவ்வாறான சமஷ்டிக் கோரிக்கை கடிதங்களை அனுப்புவதானது, அநுர தரப்பு இந்திய - ஒப்பந்த விடயத்திலிருந்து மிகவும் இலகுவாக விலகிக் கொள்ளவே பயன்படும். கடந்த பதினைந்து வருடங்கள் போதிய அனுபவங்களை தந்திருந்த போதும் கூட, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் எதனையும் கற்றுக்கொள்ளாமல் இருப்பதை எவ்வாறு புரிந்து கொள்வது?

சாதாரண தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை அவர்களின் நலன்களிலிருந்து நோக்காமல் - தங்களின் கொள்கை பிடிவாதங்களிலிருந்து நோக்குவதை அரசியல் நேர்மையீனமாகவே நோக்கவேண்டும். தமிழ் மக்கள் இவ்வாறான அரசியல் சுத்துமாத்துக்களை விரும்பவில்லை என்பதையே கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் காண்பிக்கின்றன. தமிழ்த் தேசிய அரசியலின் மையம் என்று கருதப்படும் வடக்கில் தமிழ்த் தேசிய அரசியலை முன்வைத்த கட்சிகள் பெரியளவில் பின்னடைவை சந்தித்திருக்கின்றன. இதன் பின்னரும் கூட, விடயங்களை புரிந்து கொள்ள முடியவில்லையாயின், தமிழ் மக்களை செல்வநாயகம் கூறிய கடவுளாலும் காப்பாற்ற முடியாது.

இந்திய பிரதமருக்கு, கடந்த காலத்திலும் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதன் பின்னரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எவ்வாறான பதிலை வழங்கியிருந்தார் என்பதையும் நாம் அறிவோம். கஜேந்திரகுமாரும் பங்குகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சந்திப்பின் போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் என்ன கூறியிருந்தார் என்பதை தெரிந்தும், இந்திய பிரதமரிடம் சமஷ்டிக்கு அழுத்தம் கொடுங்கள் என்று கூறுவது எந்த வகையில் சரியானது.

இந்திய பிரதமர் நினைத்தால் கூட, அயல் நாடுகள் மீது இவ்வாறான அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது. தற்போதுள்ள நிலையில், இந்தியா அதன் அயல்நாடுகளில் பலவாறான நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது - இந்த நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்காக, கொழும்பின் மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகிப்பது என்பது நடக்காத விடயம். இந்தியாவின் எல்லை இந்திய - இலங்கை ஒப்பந்தம் மட்டும்தான் - அதிலும் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் மட்டும்தான். ஒரு வேளை, புதிய அரசியல் யாப்பு ஒன்றின் மூலம் 13இன் உள்ளடங்கல்கள் முற்றிலுமாக இல்லாமலாக்கப்படலாம் என்னும் நிலைமை ஏற்படுமாயின், அவற்றை மீண்டும் அரசியல் தீர்விற்கான ஏற்பாட்டில் உள்ளடக்குமாறு இந்தியா கொழும்பை கோரமுடியும். அதற்கான கடப்பாடு இந்தியாவிற்குண்டு. இந்த விடயத்தைத்தான் இந்தியாவிடம் தமிழர் தரப்புக்கள் கோர வேண்டும். அதைவிடுத்து போக முடியாத ஊருக்கு வழி சொல்ல முற்படுவதால் தமிழ் மக்கள் மீதான வெளித்தரப்புக்களின் கரிசனை மேலும் பின்னுக்குச் செல்லவே வழிவகுக்கும்.

# யாழில் எலிக்காய்ச்சலால் 23 வயது இளைஞன் மரணம்

*யாழ்ப்பாணம், டிசெ.16*

யாழ்ப்பாணத்தில் எலிக்காய்ச்சல் நோய் என சந்தேகிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் 3 நாட்களாக சேர்க்கப்பட்டிருந்த இளைஞன் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் - கர வெட்டி பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞனே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 5 நாள் காய்ச்சலுடன் சேர்க்கப்பட்டு பின்னர் நோயின் தீவிர நிலை உணரப்பட்டு யாழ். போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட நிலையில் அந்த இளைஞன் உயிரிழந்தார். (எ- 02)

# பஸ் சாரதி, நடத்துநர் மீது தாக்குதல் 7 மாதங்களின் பின்னர் ஒருவர் கைது

### மேலும் இருவர் தலைமறைவு

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து தனியார் பேருந்து ஒன்றின் சாரதி மற்றும் நடத்துநரை தாக்கிய சந்தேகநபர் ஒருவர் நேற்றையதினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் புன்னாலைக்கட்டுவன் - யாழ்ப்பாணம் வழித்தட தனியார் பேருந்தை மறித்து 3 பேர் கொண்ட குழுவினர், பேருந்தின் நடத்துநர் மீதும் சாரதி மீதும் தாக்குதல் மேற்கொண்டனர்.

இது குறித்து பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து தேடப்பட்டு வந்த பிரதான சந்தேகநபர் நேற்றையதினம் உரும்பிராய் பகுதியில் வைத்து, யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளதுடன், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் தலைமறைவாகியுள்ளனர்.

கைதானவரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில், இன்னொருவரின் தூண்டுதலின் பேரிலேயே தாங்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் கடந்த 17. 04. 2024 அன்று இடம்பெற்ற நிலையில், குறித்த சந்தேகநபர்களை கைது செய்யுமாறு கோரி தனியார் பேருந்து சங்கத்தினர் கடந்த 20. 04. 2024 அன்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-05)

# சங்கரத்தையில் கசிப்புடன் ஒருவர் கைது!


*யாழ்ப்பாணம், டிசெ. 16*

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கரத்தை பகுதியில் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயத்துக்கு அருகாமையில் நேற்றைய தினம் காலை குறித்த நபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து 1. 5 லீற்றர் கசிப்பு பறிமுதல் செய்யப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரப்பலகைகளுடன் இருவர் கைது




*யாழ்ப்பாணம், டிசெ.16*

15 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரப்பலகைகளை மல்லாவியில் இருந்து டிப்பர் வாகனத்தில் சட்ட விரோதமாக ஏற்றி வந்த இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரி பொலிஸாரால் நாவற்குழிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ- 05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவி அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவுக் கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புதிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். குடும்பத்தில் சலசலப்பு வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**கடகம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். புது பொருள் வந்து சேரும். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். பயணங்களால் பயனடைவீர்கள்.

**சிம்மம்**
பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**கன்னி**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும்.

**விருட்சிகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**மகரம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதுவேலை கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**மீனம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர்செய்வீர்கள். துணிச்சலுடன் செயல்படும் நாள்.

# தியானம் - தன்னைத் தானே நேசித்தால் தொற்றா நோயிலிருந்து பாதுகாக்கலாம்

## வைத்திய நிபுணர் பேரானந்தராஜா அறிவுரை

யாழ்ப்பாணம், டிசெ. 16

"தியானம் இருத்தல் - அமைதியான சூழலில் மனதை ஒருமுகப்படுத்தி, தன்னைத் தானே நேசித்து, மன்னிக்க பழகினால் தொற்றா நோயிலிருந்து எம்மைப் பாதுகாக்க முடியும்"- இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் வைத்திய நிபுணர் த. பேரானந்தராஜா அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

"ஓய்வுக்கு முன்னர் ஆயத்தமாதல் தொடர்பான செயல் திறனான முதுமைப்பருவம்" எனும் தலைப்பிலான செயலமர்வு யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் "ஓய்வுக் காலத்தில் உடலியல், உளவியல் நலம்" தொடர்பில் வைத்திய நிபுணர் பேரானந்தராஜாவால் கருத்துரை வழங்கப்பட்டது. அவர் மேலும் கூறுகையில்,

"மனிதனுடைய வாழ்வில் நோய்களானது இரண்டு வகையாக ஆதிக்கம் செலுத்தும். அவை தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் என வகைப்படும். தொற்றா நோயை (நீரிழிவு, இரத்த அழுத்தம், கொழுப்புத் தன்மையுள்ள நோய்கள் போன்றவை) கண்டறிய கண்டிப்பாக 40 வயதுக்கு மேற்பட்



டவர்கள் இரத்த பரிசோதனையும், இரத்த அழுத்தப் பரிசோதனையும் குறைந்தது 03 ஆண்டுக்கு ஒரு தடவையாவது பரிசோதித்துப் பார்த்தல் சிறப்பான விடயம். தொற்றா நோய்களைத் தவிர்க்க மனித வாழ்வில் பின்வரும் 15 விடயங்களை கடைப்பிடித்தால் மனிதன் ஆரோக்கியமாக வாழலாம்.

1. சீரான உடற்பயிற்சி, 2. ஆழ்ந்த நித்திரை ( 06 மணித்தியாலங்களுக்கு குறையாத வகையில்), 3. விரதம் இருத்தல், 4. தியானம் இருத்தல் - அமைதியான சூழலில் மனதை ஒருமுகப்படுத்தி இருத்தல், 5. தன்னைத் தானே நேசித்தல், 6. மற்றவர்களை விரும்புதல், 7. மன்னிக்க பழகுதல் மற்றும் தேவையற்ற விடயங்களை மறத்தல், 8. சிரித்தல், 9. மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளை போதியளவு உண்ணுதல், 10. இயற்கை உணவு வகைகளை உண்ணுதல் (கூழ், களி மற்றும் கஞ்சி வகைகள்), 11. சூரிய ஒளியில் நிற்றல் (தசை மற்றும் எலும்பு வளர்ச்சி - காலை 10 - 11 மணிக்கிடையில் சூரிய ஒளியில் நிற்பதால் விற்றமின் டி சத்து கிடைக்கும்), 12. போதியளவு குடிநீர் அருந்துதல் 13. நேர காலத்துக்கு உண்ணுதல். 14. என்றும் நன்றியுடையவர்களாக இருத் தல்., 15. நல்ல நண்பர்களுடன் பழகுதல்.

இன்றைய தொலைக்காட்சி நாடகங்கள் எதிர்வினைகளையே அதிகம் காட்சிப்படுத்துவதால் அதனைப் பார்ப்பவர்களுக்கு நோய்கள் வருவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாகவுள்ளன.

குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பிறருடன் நேரடி உரையாடல்களில் அதிகமாக ஈடுபட்டால் ஆரோக்கியமானது.

அதிக நேர தொலைபேசிப் பாவனையும் அதிக நேரம் தொலைக்காட்சியை பார்வையிடுவாலும் மூளைத் திறன் பாதிக்கப்பட்டு மறதி நோய் ஏற்பட காரணமாக அமைகிறது.

மேலும், பத்திரிகைகள் தமது முன் பக்கத்தில் எதிர்மறையான செய்திகளை வெளியிடுவதால் எதிர்மறையான சிந்தனைகளை வாசகர்களுக்கு ஏற்படுத்தும். கூடியளவு அதனைத் தவிர்த்து நேர்மறையான செய்திகளை வெளியிடுவது வாசகர்களுக்கு ஆரோக்கியமானதாக அமையும்"- என்றார். (எ)

# மனித உரிமைகளை மதித்தால் பல பிரச்னைகள் தீர்ந்து விடும்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16

மனித உரிமைகளுக்கு மதிப் பளித்தால் பல பிரச்னைகள் தீர்ந்து விடும் என்றும் மாற்றுத் திறனாளிகள் தொடர்பில் அரச திணைக் களங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரி வித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய கிளையின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தின நிகழ்வு ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றது. பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

இதில், தலைமையுரையாற்றிய பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ், "கைதுகளின் போதான சித்திரவதை தொடர் பிலும், அரச நிறுவனங்களில் இடம்பெறும் பாரபட்சம் தொடர்பிலுமே அதிகளவான முறைப்பாடுகள் தமக்குக் கிடைக்கப்பெறுவதாகக் குறிப்பிட்டார். அத்துடன் அரச நிறு வனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகுதலுக் குரிய வசதிகள் போதுமானளவில் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், வடக்கு மாகாணத் தின் தற்போதைய ஆளுநர் நா. வேதநாயகன், வடக்கின் 4 மாவட்டங்களில் மாவட் டச் செயலராக இருந்தவர். அவருக்கு இந்த மாகாணத்தின் உட்கட்டமைப்பு பிரச் னைகள் நன்கு தெரியும். நிர்வாகத் தொய்வும் தெரியும். அப்படியான ஒருவரிடம் எமது கோரிக் கைகளை முன்வைப்பது பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இலகு வானதாக இருக்கும் எனவும் கனகராஜ் குறிப்பிட்டார்.



ஆளுநர் உரையாற்றுகை யில், "மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். அதன் ஊடாகத்தான் அதனை நிலை நாட்ட முடியும். பொலிஸார் சில இடங்களில் முறைப்பாடு களை செய்யச் செல்லும் பொது மக்களின் முறைப்பாடுகளை ஏற்பதில்லை என எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. இத்தகைய பாரபட்சங்கள் இல்லாதொழிக் கப்படுவது மனித உரிமைகளை நிலைநாட்ட உதவும்.

எமது சமூகத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முக் கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். எமது அரச அலுவ லகங்களை அவர்கள் இலகுவாக அணுகுவதற்கான வழிகள் ஏற்ப டுத்தப்பட வேண்டும். யாழ். மாவட்டச் செயலராக இருந்த போது மாற்றுத் திறனாளிகள் அணுகுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தேன். மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் கூடுதல் கரிசனையுடன் நாம் செயல்பட வேண்டும்"- என்றார்.

இந்த நிகழ்வில், மாற்றாற்ற லுடையோரை ஆட்சேர்ப்புக் கான வழிகாட்டுதல் - பரிந்துரைகள் அடங்கிய ஆவணம், ஆளுநரிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப் பாளரால் கையளிக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகள் பாதுகாப்புக்கு வருடாந்தம் 1,100 மில்லியன் ரூபா செலவு

## பொலிஸார் விசேட அறிக்கை

கொழும்பு, டிசெ. 16

**முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு ஈடுபடுத்தியுள்ள பொலிஸாருக்கான வருடாந்த செலவீனத் துக்காக மக்கள் பணத்தி லிருந்து ரூ. 1,100 மில்லியன் (வருடாந்தம் ரூ. 110 கோடி- மாதாந்தம் சுமார் ரூ. 9 கோடி) செலவிடப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.**

பிரமுகர் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தினால் நியமிக்கப் பட்ட குழுவினால் இது கண் டறியப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித் துள்ளது.

அத்துடன் முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு மாத்திரம் வரு டாந்தம் ரூ. 326 மில்லியன் செலவீனம் மேற்கொள்ளப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதற்கமைய மகிந்த ராஜ பக்ஷவின் பாதுகாப்புக் கடமை யில் ஈடுபடுத்தப்பட்ட பொலி ஸாரின் ஒரு பகுதியின் நேற்று முன்தினம் மீள பொலிஸ் திணைக் களத்திற்கு அழைக்கப் பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிவித்தலில்-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாது காப்புக்காக நியமிக்கப்பட் டிருந்த பாதுகாப்பு உத்தியோ கத்தர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாகவும், முன்னாள் ஜனாதிபதிக்கு அச்சு றுத்தல்கள் அல்லது பாதிப்பு கள் ஏற்பட்டால் அதற்கு உரிய திணைக்களங்கள் அதற்கு பொறுப்பேற்க வேண்டும் என வும் ஊடகங்களில் செய்தி ஒன்று தற்போது பரவி வருகின் றது.

தற்போதைய அரசாங்கத் தின் கொள்கை விஞ்ஞாபனத் தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒய்வு பெற்ற ஜனாதிபதிகளின் சிறப் புரிமைகளை நீக்கும் கொள்கை முடிவின்படி, பிரமுகர் பாது காப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தினால் நிய மிக்கப்பட்ட குழு, முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கை மற்றும் அதற்காக இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் மேற்கொள் ளப்பட்ட செலவுகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு விவகாரங்களில் ஈடுபடுத்தப் படும் பொலிஸ் அதிகாரிகளின் வருடாந்த செலவு ரூ. 1,100 மில்லியன் என அவதானிக்கப் பட்டுள்ளது. அத்துடன் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் பாதுகாப்புக்காக வருடாந்தம் ரூ. 326 மில்லிய னுக்கும் அதிகமான தொகை செலவிடப்படுகிறது.இதன்படி, மகிந்த உள்ளிட்ட முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையை 60 இற்கு உட்பட்டு திருத்திய மைத்து பேண தீர்மானிக்கப் பட்டுள்ளது-என்றுள்ளது. (அ)

# தேசிய மக்கள் சக்தியின் மற்றொரு எம்.பியின் தகைமையில் சர்ச்சை!

கொழும்பு, டிசெ. 16

கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சி சார் பில் கேகாலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய கோசல நுவன் ஜயவீரவின் கல்வித் தகைமைகள் தொடர் பிலும் சிங்கள ஊடகங்கள் சர்ச்சையை கிளப்பியுள்ளன.

'பொறியியலாளர் கோசல ஜயவீர' என பிரசார சுவரொட் டிகளைக் காட்டி கேகாலையில் போட்டியிட்ட அவர் பொதுத் தேர்தலில் 61,713 விருப்பு வாக் குகளைப் பெற்று கேகாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஏழு திசைகாட்டி உறுப்பினர் களில் இரண்டாவது இடம் பிடித்தார்.

பொதுத் தேர்தல் பிரசாரத் தின்போது, அவர் தன்னை ஒரு பொறியியலாளர் என்று விளம் பரம் செய்து, தனது சுயவிப ரத்தை பின்வருமாறு வெளி யிட்டிருந்தார்-'குருகலை கனிஷ்ட கல்லூரியிலும் எஹலியகொட மத்திய கல்லூ ரியிலும் பாடசாலைக் கல் வியை முடித்து திறந்த பல் கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் உயர் கல்வியை கற்று திறந்த பல்கலைக்கழக பொது மாணவர் சங்கத்தின் தலை வராக கடமையாற்றி சோசலிச கட்சியின் மாணவர் சங்கத்தி லிருந்து தேசிய அரசியலில் பிரவேசித்த சகோதரர் கோசல' என குறிப்பிடப்பட் டிருந்தது.

திறந்த பல்கலைக்கழகத்தில் எந்தப் பொறியியல் படிப் பைப் படித்தார் என்பது தெரிய வில்லை.

பாராளுமன்ற இணையத் தளத்தில் டிப்ளோமோ பெற் றவர் என்றும், உதவிப் பொறி யியலாளர் என்றும் தொழில் தகுதியாகப் பட்டியலிட்டா லும், அவர் பெயருக்கு முன்னால் பொறியியலாளர் என்ற பட்டத்தை எழுதும் அளவுக்கு பட்டம் பெற்றிருக் கவில்லை என்று தெரிகிறது.

பொறியியலாளர் என்று குறிப்பிடப்பட்டிருந்த அனைத்து புகைப்படங்களும் தற்போது அவரது சமூக ஊடக பக்கங்களில் இருந்து மறைந் துவிட்டன. (அ)

# கைதிக்கு கைவிலங்கு சாவியை கையளிக்க வந்தவர் மாட்டினார்

## முன்னாள் பொலிஸ் அதிகாரி என தகவல்

கொழும்பு, டிசெ. 16

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டுள்ள பாதாள உலகக் குழுவின் தலைவரான மிதிகம ருவன் என்ற நபருக்கு கைவி லங்கு சாவியை இரகசியமாக வழங்க வந்த நபர் கைது செய் யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலைகள் அவசர நடவடிக்கை மற்றும் தந்திரோ பாயப் படை அதிகாரிக ளால் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதிய மகசின் சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விசேட பிரிவின் சந்தேகநபரான மிதிகம ருவன் என்ற கைதியை பார்ப்பதற்காக 12ஆம் திகதி பிற்பகல் 03.30 மணியளவில் பார்வையாளர்கள் பகுதிக்கு தம்பதியர் வருகை தந்திருந்த னர்.

அவர்களில் ஒருவர் மீது சந்தேகத்தின் அடிப்படையில், சிறைச்சாலை அவசரகால தந்தி ரோபாயப் படை அதிகா ரிகள் அவரை சோதனையிட்டனர்.

இதன்போது, அவரது பணப்பையில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப் பட்டிருந்த கைவிலங்கு சாவி கண்டுபிடிக்கப்பட்டது.

இவருடன் வந்த பெண்ணுக்கு மிதிகம ருவனுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது தெரியவந் தது.

இதன்படி, கைது செய்யப் பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.முதற்கட்ட விசார ணையின் போது, தான் சில காலம் பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றியதாக சந்தேக நபர் தெரிவித்துள் ளார். (எ)

# அசோக ரன்வல அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளார்!

## ஆசு மாரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 16

அரசாங்கத்தை நெருக்க டிக்குள்ளாக்கும் வகையிலான விடயத்தை முன்னாள் சபாநா யகர் அசோக ரன்வல மேற் கொண்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரி வித்துள்ளார்..

அவர் மேலும் தெரிவிக்கை யில்-முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவின் இரா ஜினாமா கடிதம் அதிசயிக்கத் தக்க வகையிலேயே அமைந் துள்ளது. கல்வித்தகைமையை உறுதி செய்யத்தேவையான சில கடிதங்கள் தற்போது தன்னி டத்தல் இல்லை எனவும் ,அவற்றை உரிய நிறுவனங்க ளிலிருந்து பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதா கவும் முன்னாள் சபாநாயகர் அவருடைய இராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பான் பல்கலைக்கழக மொன்றில் பட்டப்படிப்பை தொடர்வதற்காக இணைந்து கொள்ளும் பட்சத்தில் அதற் கான கடிதங்களை அவர்கள் வழங்குவர். ஆனால் அந்த கடிதமும் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவர் நாட்டின் சபாநா யகராக இருப்பதால் குறித்த நாட்டின் பல்கலைக்கழ கத்திடம் கோரிக்கை முன் வைத்தால் ஒரே நாளில் அதற்கான ஆவணங்களை அவ ரால் பெற்றுக்கொள்ள முடியும். அவருடைய பட்டப்படிப் பிற்கான சான்றிதழ் காணா மல்போயுள்ளதாயினும் ஒரே நாளில் பெற்றுக்கொள்ள முடி யும். நிழல்நிலையின் ஊடாக வும் பெற்றுகன்கொள்ள முடி யும்.

இந்த கடிதத்தின் ஊடாக அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கும் விடயத்தையே முன்னாள் சபாநாயகர் மேற் கொண்டுள்ளார்-என்றார். (அ)

# வாய்த்தர்க்கத்தில் தாயை தாக்கிக் கொன்றார் மகன்!

கொழும்பு, டிசெ. 16

தனிப்பட்ட தகராறு கார ணமாக ஏற்பட்ட வாய்த்தர்க் கத்தையடுத்து மகன் தாக்கி யதில் தாய் உயிரிழந்துள்ளார்.

கொடகவெல, பிசோகொ டுவ பிரதேசத்தில் நேற்று அதி காலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்பாய, பல்லேபெத்த பகு தியைச் சேர்ந்த 82 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் தொடர்பில் நீதவான் விசாரணைகள் நடத்தப்படவுள் ளதுடன், சந்தேக நபரை கைது செய்வதற்கான மேலதிக விசா ரணைகளை கொடகவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கட்டடம் ஒன்றின் நிர்மாணப் பணிக ளுக்காக வந்திருந்த இரண்டு பணியாளர்களுக்கு இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டு ஒருவர் மற்றைய நபரை அடித்துக் கொன்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சீதுவ பொலிஸ் பிரிவிற்கு பட்ட 2ஆவது ஒழுங்கை பகுதி யில் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜூபிலி மாவத்தை, வயிக் கால பிரதேசத்தில் வசிக்கும் 47 வயதுடைய நபரே உயிரிழந் துள்ளார்.

கொலைச் சம்பவம் தொடர்பில் கெக்கிராவ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது டைய சந்தேகநபர் பொலிஸ ாரால் கைது செய்யப்பட்டுள் ளார்.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மின் கட்டண திருத்தம் தொடர்பாக ஆய்வுகள்

கொழும்பு, டிசெ. 16

மின் கட்டணத் திருத்தம் தொடர்பான ஆய்வுகள் தற்போது ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக பொதுப்பயன் பாடுகள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

மின் உற்பத்திக்காக மின்சார சபைக்கு பெற்றுக் கொடுக்கப் படும் எரிபொருளுக்கான விலை விபரங்கள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அறிக்கைக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

தங்களின் கோரிக்கைக்கு அமைவாக கிடைக்கப் பெற் றுள்ள குறித்த அறிக்கைக்க மைய மின் கட்டணத் திருத்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாக பொதுப்பயன் பாடுகள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

விரிவான ஆய்வறிக்கை எதிர்வரும் 17 ஆம் திகதி பொது மக்களுக்கு வெளியிடப்படு மென குறிப்பிடப்பட் டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மக் கள் கருத்துக்களை அறிந்துக் கொள்ளும் நடவடிக்கை எதிர் வரும் 17 ஆம் திகதி ஆரம்பிக் கப்படுமென பொதுப்பயன் பாடுகள் ஆணைக்குழு கூறியுள் ளது.

மக்கள் கருத்துக்களை பெற் றுக்கொள்ளும் செயற்பாடுகள் 21 நாட்களுக்கு முன்னெடுக்கப் படவுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களின் மீள்எழுச்சியை தடுப்பதற்கே அமெரிக்கத் தடை!

## மேன்முறையீடு செய்வேன் என்கிறார் உதயங்க

கொழும்பு, டிசெ. 16

**நாட்டில் புதிய ஆட்சி ஏற்பட்டாலும் ஸ்திரமற்ற நிலைமையே காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில், ராஜபக்ஷக்கள் குறிப்பாக நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் மீள் எழுச்சி அடைந்து அதிகாரத்துக்கு வரக்கூடாது என்பதற்காகவே என்னை மையப்படுத்திய அமெரிக்க தடை அறிவிப்பின் உள்நோக்கமாக உள்ளது என்று ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவரும் ராஜபக்ஷக்களின் ஒன்றுவிட்ட சகோதரருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.**

சிறிலங்கன் விமான சேவையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன மற்றும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் மீது சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் மற்றும் மனித உரிமைகள் தினத்துடன் இணைந்து, உலகெங்கிலும் உள்ள ஊழல் மற்றும் மனித உரிமைமீறல்களுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதில் அதன் உறுதிப்பாட்டை வலியுறுத்தும் வகையில் அமெரிக்க வெளியுறவுத்துறை தடைகளை விதித்துள்ளது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் எயார்பஸ் விமானங்களை அதிக விலைக்கு கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்துவதற்காக இலஞ்சம் பெற்றதாக கபில சந்திரசேன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்கு மிக் விமானங்களை கொள்வனவு செய்தமை தொடர்பான ஊழல் வேலைத்திட்டத்தை முன்னெடுத்ததாக உதயங்க வீரதுங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அமெரிக்க தடை அறிவிப்பு சம்பந்தமாக உதயங்க வீரதுங்க தெரிவிக்கையில்-அமெரிக்கா என் மீது விதித்துள்ள தடை அறிவிப்பை பார்க்கின்றபோது ஆச்சரியமாகவுள்ளது. அத்துடன் அடிப்படையற்ற காரணங்களையும் அதற்கு கூறியுள்ளமையானது வியப்பளிப்பதாகவும் உள்ளது.

அந்த வகையில் சில விடயங்களை இங்கே தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

முதலாவதாக, இந்த தடை அறிவிப்பானது தென்னாபிரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமொன்றின் அறிக்கைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனால் குறித்த அறிக்கையில் அறுபது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதும் அவை படை அதிகாரிகளாகவே உள்ளனர். அதில் எனது பெயர் உள்ளடக்கப்படவில்லை என்பது முக்கியமான விடயமாகும்.

அவ்வாறான நிலையில் அமெரிக்கா எனது பெயரை உள்ளீர்த்து தடை விதித்தமைக்கு காரணம் அநுரகுமார தலைமையிலான அரசாங்கத்துக்கு தனது ஆதரவினை வெளிப்படுத்துவதற்காகவே ஆகும். அதாவது அமெரிக்காவின் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இவர் அநுரகுமாரவுடன் பேச்சுக்களை நடத்தும்போது நாட்டுக்கு வெளியில் மோசடியான முறையில் கொண்டு செல்லப்பட்ட பணத்தை மீளப் பெறுவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குவதாக அறிவித்திருந்தார்.

அதேநேரம் அவர்களுக்கு இன்னுமொரு தேவையும் உள்ளது. அதாவது அநுர அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் அவர்கள் ஸ்திரமற்ற நிலையில் தான் உள்ளார்கள் ஆகவே ராஜபக்ஷ குடும்பம் மீள் எழுச்சி கண்டுவிடும் ஆட்சிக்கு வந்துவிடும் என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது. குறிப்பாக நாமல் ராஜபக்ஷ தலைமையிலான இளம் தலைமுறையினர் ஆட்சியதிகாரத்தினைப் பெற்றுவிடுவார்கள் என்ற அச்சம் இருக்கிறது. இதன் காரணமாகவே ராஜபக்ஷ குடும்பத்தை அடியோடு பலவீனப்படுத்தவேண்டிய தேவை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. அதனை அநுர அரசுக்கு ஒரு உதவியாகவே அமெரிக்கா செய்கின்றது.

இதேபோன்றதொரு நிலைமை முன்பும் காணப்பட்டது.

2015ஆண்டில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தினை தொடர்ந்து அமெரிக்காவின் வெளிவிவகார இராஜாங்க செயலாளர் ஜோன் ஹெரி இலங்கைக்கு 43 ஆண்டுகளுக்குப் பின்னர் வருகை தந்திருந்தார்-என்றார். (அ)

# இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழுங்குவதாக நியூசிலாந்து அரசு உறுதி!

கொழும்பு, டிசெ. 16

உணவு பாதுகாப்பு, மருத்துவம், விளையாட்டு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு திட்டங்கள் உள்ளிட்ட பல துறைகளை மேம்படுத்த நியூசிலாந்து அரசு முழு ஆதரவை இலங்கைக்கு வழங்கும் என உறுதியளித்துள்ளது.

நியூசிலாந்து தூதுவர் டேவிட் பயினுக்கும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வைத்து இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கைக்கு வருடாந்தம் பிரவேசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் நியூசிலாந்து முதலீடுகளுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக நியூசிலாந்து தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# நீதிமன்று அருகில் துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, டிசெ. 16

மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றுக்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் பிற்பகல் நடத்தப்பட்ட குறித்த துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்த பெண் சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு தொடர்பான மேலதிக விசாரணைகளை மாளிகாகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# 2024 இல் இதுவரையான காலத்தில் 46,934 டெங்கு நோயாளர்கள் பதிவு

கொழும்பு, டிசெ. 16

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 46 ஆயிரத்து 934 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதிகளவான நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

இதன்படி, மேல் மாகாணத்தில் 20 ஆயிரத்து 218 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 857 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் 23 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

(அ)

# கொழும்பு மேயர் பதவிக்கு சஜித் அணி ஹிருணிகாவை முன்னிறுத்தத் திட்டம்!

கொழும்பு, டிசெ. 16

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்குத் தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்படாமை தொடர்பில் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு மேயர் வேட்பாளராக ஹிருணிகாவை களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

கடும் இழுபறிக்கு மத்தியில் தேசியப் பட்டியல் பிரச்னைக்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்வு கண்டுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணி சிதையாத வகையில் பங்காளிக் கட்சிகளுக்கும் தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப் பெற்ற ஐந்து தேசியப் பட்டியல் ஆசனங்களில், பங்காளிக் கட்சிகளுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய மூன்று ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிஷாம் காரியப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஆ.மொஹமட் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சுஜீவ சேனசிங்க ஆகியோரின் பெயர்கள், தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேசியப் பட்டியல் உறுப்பினராக இதற்கு முன்னர் பெயரிடப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மீகொடையில் மனைவி குழந்தையுடன் காரில் பயணித்தவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, டிசெ. 16

மீகொடை - நாகஹவத்தை பகுதியில் காரில் பயணித்த நபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மீகொட - நாகஹவத்த பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் நேற்று முன் தினம் இரவு மூத்த சகோதரர் வீட்டுக்குச் சென்று மீண்டும் காரில் வீடு திரும்பியுள்ளார்.

அதன்போது, வீதியோரம் மறைந்திருந்த இருவர், வாகனத்தை இடைமறித்துத் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு, தப்பியோடியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தெரியவராத நிலையில், சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# 68000 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் டிசெம்பர் மாதத்தில் மட்டும் நாட்டுக்கு வருகை

கொழும்பு, டிசெ. 16

இந்த ஆண்டின் டிசம்பர் மாதத்தின் முதல் 13 நாட்களில், 68 ஆயிரத்து 648 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதல் டிசம்பர் 13 ஆம் திகதி வரை, 18 இலட்சத்து 73 ஆயிரத்து 521 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இந்தியா, ரஷ்யா, ஜேர்மனி, ஆஸ்திரேலியா, சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து, அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்னெலிகொடவுக்கு என்ன நடந்தது? நீதியான விசாரணைகளை நடத்துக!

## எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 16

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட, தொடர்பான வழக்கு விசாரணைகள் பக்கச்சார்பின்றியும், வெளிப்படைத்தன்மை வாய்ந்த விதத்திலும் முன்னெடுக்கப்படு வதை உறுதிப்படுத்துமாறு பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் எல்லைகளற்ற செய்தியாளர் கள் அமைப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசிடம் வலியுறுத்தியுள்ளது.**

"லங்கா ஈ - நியூஸ்" என்ற இணைய செய்தித்தளத்தில் கேலிச்சித்திர ஓவியராகவும் , அரசியல் பத்தி எழுத்தாளராகவும் பணியாற்றிய பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி ஹோமாகம நகரில் கடத்திச் செல்லப்பட்டார்.

அவரது கடத்தலுடன் தொடர்புபட்டிருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்பட்ட இராணுவப் புலனாய்வுச் சேவை அதிகாரிகள் 9 பேர் தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணைகள் கடந்த 2019 ஆம் ஆண்டுடன் தடைப்பட்டிருந்த நிலையில், அந்த விசாரணைகள் கடந்த 6 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில் இது பற்றிக் கருத்து வெளியிட்டிருக்கும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு, கடந்த செப்டெம்பர் மாதம் ஜனாதிபதியாகத் தெரிவான அநுரகுமார திஸாநாயக்க, அரசியல் நோக்கங்களுக்காகப் படுகொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளை உரியவாறு நிறைவு செய்யப்பட்டு, பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படும் என வாக்குறுதியளித்திருக்கின்றார் என்று சுட்டிக் காட்டியுள்ளது.

"பிரகீத் எக்னெலிகொடவின் வலிந்து காணாமல் ஆக்கப்படல் தொடர்பில் உண்மையை அறிந்துகொள்வதற்காக அவரது குடும்பத்தினர் 14 ஆண்டுகளாகத் தவிப்புடன் காத்திருக்கின்றார்கள்.

எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வழக்கு விசாரணைகள் பக்கச்சார்பின்றியும், வெளிப்படைத் தன்மை வாய்ந்ததாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என உரிய அதிகாரிகளிடம் வலியுறுத்துகின்றோம்.

இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் எவரெனினும், அவர்கள் கொண்டிருக்கக்கூடிய அரசியல் மற்றும் இராணுவத் தொடர்புகளுக்கு அப்பால் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதுமாத்திரமன்றி சாட்சியாளர்கள் மற்றும் விசாரணையாளர்களைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்." - என்றும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

(அ)

# நான்கு மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 16

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி கண்டி, பதுளை, மாத்தளை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த எச்சரிக்கை அறிவிப்பானது முதலாவது கட்டத்தின் கீழ் அமுலில் இருக்கும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் எல்ல, பசறை, ஹாலிஎல, அப்புத்தளை பிரதேச செயலக பிரிவுகளுக்கும்,கண்டி மாவட்டத்தில் மெததும்பர, பாததும்பர பிரதேச செயலக பிரிவுகளுக்கும்,

குருநாகல் மாவட்டத்தில் ரிதீகம பிரதேச செயலக பிரிவுகளுக்கும்,

மாத்தளை மாவட்டத்தில் அம்பன்கஹ கோறளை, ரத்தொட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கும் இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது.

மேலும் அந்த அமைப்பு மெதுவாக உருவாகி மேற்கு வடமேற்கு நோக்கி நகரும். அதன்பின்னர் அடுத்த 2 நாட்களுக்கு வடக்கே தமிழக கடற்கரையை நோக்கி நகரும் வாய்ப்பு உள்ளது.

இந்த முறைமை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் எதிர்வரும் கணிப்புகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் பொதுமக்களை வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும்,

ஏனைய பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளையில் பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

(அ)

# மருந்துகள் விலையை முறையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 16

மருந்துகளின் விலையை முறையாக நடைமுறைப் படுத்தியதன் பின்னர் எதிர் காலத்தில் அவற்றைக் குறைந்த விலையில் விநியோகிப்பதற்கு எதிர்பார்ப்பதாகத் தேசிய ஔடதங்கள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

தற்போது மருந்து கொள்வனவு செய்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக தற்போது மருந்துகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் காலத்தில் மருந்து கொள்வனவு உள்ளிட்ட பிரச்சினைகள் நிவர்த்திக்கப்பட்டு அவற்றைக் குறைந்த விலையில் வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

(அ)

# மகிந்தவின் பாதுகாப்புக்காக 60 பொலிஸ், 231 முப்படையினர்

## அமைச்சர் ஆனந்த விஜயபால

கொழும்பு, டிசெ. 16

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷக்கு 60 பொலிஸாரும் 231 முப்படையைச் சேர்ந்தவர்களும் பாதுகாப்புக்காக தற்போதும் உள்ளனர். ஆனால் எதிர்க்கட்சியினர் அதனை மறைத்து அவரது உயிருக்கு ஆபத்து என்று பொய்யான பிரசாரங்களைச் செய்து மக்களை திசை திருப்புவதற்கான சூழச்சியை முன்னெடுக்கின்றனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பு குறைக்கப்படுவது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் ஜனாதிபதிகளில் எந்த ஒருவரினதும் பாதுகாப்பு தொடர்பில் புலனாய்வு அறிக்கைகளின் பிரகாரம் பொலிஸாரே தீர்மானம் எடுக்கின்றார்கள். அந்த தீர்மானங்களில் கடந்த கால ஆட்சியாளர்கள் போன்று நாங்கள் தலையீடுகளைச் செய்வதில்லை.

அந்த வகையில் பொலிஸார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த 176 பொலிஸாரில் 16 பொலிஸை குறைத்து 60 பேரை வழங்கியுள்ளனர்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதிக்கு இராணுவத்தைச் சேர்ந்த 64 பேர் உள்ளடங்கலாக 231 முப்படைகளைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்புக்காக இன்னமும் உள்ளனர்.

ஆனால் அந்த விடயத்தினை எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் மறைத்துவிடுகின்றார்கள்.

மக்களை திசைதிருப்பும் சூழ்ச்சியுடன் தான் கருத்துக்களை வெளியிடுகின்றார்கள். அதேநேரம், அரசாங்கத்தினைப் பொறுத்தவரை பொதுக்கொள்கையொன்றையே கொண்டிருக்கிறது.

நாட்டின் தேசிய பாதுகாப்பையும், பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்கின்றபோது தனி நபர்களுக்கான பாதுகாப்புக்காக கோடிக்கணக்கில் செலவிட முடியாது.

அரசாங்கத்தில் உள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் கூட இன்னமும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பெற்றுக்கொள்ளாத நிலையில் உள்ளனர். ஆகவே, எம்மைப் பொறுத்தவரையில் எமது அரசாங்கத்தில் அரசியல்வாதிகள் பாதுகாப்பு விடயத்தில் தலையீடுகளைச் செய்வதில்லை. அதனை பொலிஸாரே இறுதி செய்கின்றார்கள்.

ஆகவே, அரசாங்கத்தின் மீது அரசியல் நோக்கத்துக்காக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது-என்றார்.

(அ)

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணையை சபையில் முன்வைக்கும் அவசியமில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 16

சபாநாயகர் பதவியிலிருந்து அசோக ரன்வல விலகியுள்ள நிலையில் அவருக்கு எதிராகக் கைச்சாத்திடப்பட்டுள்ள அவநம்பிக்கை பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அவசியமில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், ஒழுக்க நெறியை மீறியமை தொடர்பில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் பதவி விலகியுள்ளபோதிலும் தமது கல்வித் தகைமை தொடர்பில் இதுவரையில் உரிய வகையில் அவர் விளக்கமளிக்கவில்லை.

அதேநேரம், பட்டங்களைப் பெற்றுள்ளதாகப் போலியான தகவல்களைச் சமர்ப்பித்துள்ள மேலும் பலர் ஆளும் தரப்பில் உள்ளனர்.

கற்றவர்களை பாராளுமன்றத்துக்குக் கொண்டுவருவதாகக் கூறி, தேசிய மக்கள் சக்தி, பொய்யர்களை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இவ்வாறானவர்களைக் களையெடுப்பதற்கு, மீண்டுமொரு சிரமதானத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

(அ)

# இறக்குமதி அரிசியில் வண்டு மீள் ஏற்றுமதி செய்ய உத்தரவு

கொழும்பு, டிசெ. 16

தனியார் இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசித் தொகையில் பாவனைக்கு பொருத்தமற்ற 3 கொள்கலன்களில் இருந்த பெருமளவான அரிசியை மீள் ஏற்றுமதி செய்யுமாறு சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுமார் 75,000 கிலோ அரிசி இவ்வாறு பாவனைக்கு பொருத்தமற்றது என்பது தெரியவந்துள்ளது.

நாட்டுக்கு கொண்டு வரப்படும் அரிசி சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்னர் சுகாதார அமைச்சின் உணவு மற்றும் மருந்து பரிசோதகர்களால் சோதனை மேற்கொள்ளப் படும்.

அதன்படி, பரிசோதனைகளின் போது, இறக்குமதி செய்யப்பட்ட 3 கொள்கலன்களில் இருந்த 75000 கிலோ அரிசி பாவனைக்கு பொருத்தமற்றது என்பது தெரியவந்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களின் மீள்எழுச்சியை தடுப்பதற்கே அமெரிக்கத் தடை!

## மேன்முறையீடு செய்வேன் என்கிறார் உதயங்க

கொழும்பு, டிசெ. 16

**நாட்டில் புதிய ஆட்சி ஏற்பட்டாலும் ஸ்திரமற்ற நிலைமையே காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில், ராஜபக்ஷக்கள் குறிப்பாக நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் மீள் எழுச்சி அடைந்து அதிகாரத்துக்கு வரக்கூடாது என்பதற்காகவே என்னை மையப்படுத்திய அமெரிக்க தடை அறிவிப்பின் உள்நோக்கமாக உள்ளது என்று ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவரும் ராஜபக்ஷக்களின் ஒன்றுவிட்ட சகோதரருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.**

சிறிலங்கன் விமான சேவையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன மற்றும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் மீது சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் மற்றும் மனித உரிமைகள் தினத்துடன் இணைந்து, உலகெங்கிலும் உள்ள ஊழல் மற்றும் மனித உரிமைமீறல்களுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதில் அதன் உறுதிப்பாட்டை வலியுறுத்தும் வகையில் அமெரிக்க வெளியுறவுத் துறை தடைகளை விதித்துள்ளது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் எயார்பஸ் விமானங்களை அதிக விலைக்கு கொள்வனவு செய்வதை ஒழுங்குபடுத்துவதற்காக இலஞ்சம் பெற்றதாக கபில சந்திரசேன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படைக்கு மிக் விமானங்களை கொள்வனவு செய்தமை தொடர்பான ஊழல் வேலைத் திட்டத்தை முன்னெடுத்ததாக உதயங்க வீரதுங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அமெரிக்க தடை அறிவிப்பு சம்பந்தமாக உதயங்க வீரதுங்க தெரிவிக்கையில்-அமெரிக்கா என் மீது விதித்துள்ள தடை அறிவிப்பை பார்க்கின்றபோது ஆச்சரியமாகவுள்ளது. அத்துடன் அடிப்படையற்ற காரணங்களையும் அதற்கு கூறியுள்ளமையானது வியப்பளிப்பதாகவும் உள்ளது.

அந்த வகையில் சில விடயங்களை இங்கே தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

முதலாவதாக, இந்த தடை அறிவிப்பானது தென்னாபிரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனமொன்றின் அறிக்கைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனால் குறித்த அறிக்கையில் அறுபது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதும் அவை படை அதிகாரிகளாகவே உள்ளனர். அதில் எனது பெயர் உள்ளடக்கப்படவில்லை என்பது முக்கியமான விடயமாகும்.

அவ்வாறான நிலையில் அமெரிக்கா எனது பெயரை உள்ளீர்த்து தடை விதித்தமைக்கு காரணம் அநுரகுமார தலைமையிலான அரசாங்கத்துக்கு தனது ஆதரவினை வெளிப்படுத்துவதற்காகவே ஆகும். அதாவது அமெரிக்காவின் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இவர் அநுரகுமாரவுடன் பேச்சுக்களை நடத்தும்போது நாட்டுக்கு வெளியில் மோசடியான முறையில் கொண்டு செல்லப்பட்ட பணத்தை மீளப் பெறுவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குவதாக அறிவித்திருந்தார்.

அதேநேரம் அவர்களுக்கு இன்னுமொரு தேவையும் உள்ளது. அதாவது அநுர அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் அவர்கள் ஸ்திரமற்ற நிலையில் தான் உள்ளார்கள் ஆகவே ராஜபக்ஷ குடும்பம் மீள் எழுச்சி கண்டுவிடும் ஆட்சிக்கு வந்துவிடும் என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது. குறிப்பாக நாமல் ராஜபக்ஷ தலைமையிலான இளம் தலைமுறையினர் ஆட்சியதிகாரத்தினைப் பெற்றுவிடுவார்கள் என்ற அச்சம் இருக்கிறது. இதன் காரணமாகவே ராஜபக்ஷ குடும்பத்தை அடியோடு பலவீனப்படுத் தவேண்டிய தேவை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. அதனை அநுர அரசுக்கு ஒரு உதவியாகவே அமெரிக்கா செய்கின்றது.

இதேபோன்றதொரு நிலைமை முன்பும் காணப்பட்டது. 2015ஆண்டில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தினை தொடர்ந்து அமெரிக்காவின் வெளிவிவகார இராஜாங்க செயலாளர் ஜோன் ஹெரி இலங்கைக்கு 43 ஆண்டுகளுக்குப் பின்னர் வருகை தந்திருந்தார்-என்றார். (அ)

# இலங்கைக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக நியூசிலாந்து அரசு உறுதி!

கொழும்பு, டிசெ. 16

உணவு பாதுகாப்பு, மருத்துவம், விளையாட்டு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு திட்டங்கள் உள்ளிட்ட பல துறைகளை மேம்படுத்த நியூசிலாந்து அரசு முழு ஆதரவை இலங்கைக்கு வழங்கும் என உறுதியளித்துள்ளது.

நியூசிலாந்து தூதுவர் டேவிட் பயினுக்கும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வைத்து இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கைக்கு வருடாந்தம் பிரவேசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் நியூசிலாந்து முதலீடுகளுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக நியூசிலாந்து தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# நீதிமன்று அருகில் துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, டிசெ. 16

மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றுக்கு அருகில் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் பிற்பகல் நடத்தப்பட்ட குறித்த துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்த பெண் சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு தொடர்பான மேலதிக விசாரணைகளை மாளிகாகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 2024 இல் இதுவரையான காலத்தில் 46,934 டெங்கு நோயாளர்கள் பதிவு

கொழும்பு, டிசெ. 16

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 46 ஆயிரத்து 934 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதிகளவான நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

இதன்படி, மேல் மாகாணத்தில் 20 ஆயிரத்து 218 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 857 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் 23 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# கொழும்பு மேயர் பதவிக்கு சஜித் அணி ஹிருணிகாவை முன்னிறுத்தத் திட்டம்!

கொழும்பு, டிசெ. 16

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்குத் தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்படாமை தொடர்பில் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு மேயர் வேட்பாளராக ஹிருணிகாவை களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

கடும் இழுபறிக்கு மத்தியில் தேசியப் பட்டியல் பிரச்னைக்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்வு கண்டுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணி சிதையாத வகையில் பங்காளிக் கட்சிகளுக்கும் தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப் பெற்ற ஐந்து தேசியப் பட்டியல் ஆசனங்களில், பங்காளிக் கட்சிகளுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய மூன்று ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிஷாம் காரியப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஆ.மொஹமட் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சுஜீவ சேனசிங்க ஆகியோரின் பெயர்கள், தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேசியப் பட்டியல் உறுப்பினராக இதற்கு முன்னர் பெயரிடப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மீகொடையில் மனைவி குழந்தையுடன் காரில் பயணித்தவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, டிசெ. 16

மீகொடை - நாகஹவத்தை பகுதியில் காரில் பயணித்த நபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மீகொட - நாகஹவத்த பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் நேற்று முன் தினம் இரவு மூத்த சகோதரர் வீட்டுக்குச் சென்று மீண்டும் காரில் வீடு திரும்பியுள்ளார்.

அதன்போது, வீதியோரம் மறைந்திருந்த இருவர், வாகனத்தை இடைமறித்துத் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு, தப்பியோடியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தெரியவராத நிலையில், சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 68000 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் டிசெம்பர் மாதத்தில் மட்டும் நாட்டுக்கு வருகை

கொழும்பு, டிசெ. 16

இந்த ஆண்டின் டிசம்பர் மாதத்தின் முதல் 13 நாட்களில், 68 ஆயிரத்து 648 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதல் டிசம்பர் 13 ஆம் திகதி வரை, 18 இலட்சத்து 73 ஆயிரத்து 521 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இந்தியா, ரஷ்யா, ஜேர்மனி, ஆஸ்திரேலியா, சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து, அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்னெலிகொடவுக்கு என்ன நடந்தது? நீதியான விசாரணைகளை நடத்துக!

## எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 16

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட, தொடர்பான வழக்கு விசாரணைகள் பக்கச்சார்பின்றியும், வெளிப்படைத்தன்மை வாய்ந்த விதத்திலும் முன்னெடுக்கப்படு வதை உறுதிப்படுத்துமாறு பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் எல்லைகளற்ற செய்தியாளர் கள் அமைப்பு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசிடம் வலியுறுத்தியுள்ளது.**

"லங்கா ஈ - நியூஸ்" என்ற இணைய செய்தித்தளத்தில் கேலிச்சித்திர ஓவியராகவும் , அரசியல் பத்தி எழுத்தாளராகவும் பணியாற்றிய பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி ஹோமாகம நகரில் கடத்திச் செல்லப்பட்டார்.

அவரது கடத்தலுடன் தொடர்புபட்டிருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்பட்ட இராணுவப் புலனாய்வுச் சேவை அதிகாரிகள் 9 பேர் தொடர்பான நீதிமன்ற வழக்கு விசாரணைகள் கடந்த 2019 ஆம் ஆண்டுடன் தடைப்பட்டிருந்த நிலையில், அந்த விசாரணைகள் கடந்த 6 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில் இது பற்றிக் கருத்து வெளியிட்டிருக்கும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு, கடந்த செப்டெம்பர் மாதம் ஜனாதிபதியாகத் தெரிவான அநுரகுமார திஸாநாயக்க, அரசியல் நோக்கங்களுக்காகப் படுகொலை செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளை உரியவாறு நிறைவு செய்யப்பட்டு, பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படும் என வாக்குறுதியளித்திருக்கின்றார் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

"பிரகீத் எக்னெலிகொடவின் வலிந்து காணாமல் ஆக்கப்படல் தொடர்பில் உண்மையை அறிந்துகொள்வதற்காக அவரது குடும்பத்தினர் 14 ஆண்டுகளாகத் தவிப்புடன் காத்திருக்கின்றார்கள்.

எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் வழக்கு விசாரணைகள் பக்கச்சார்பின்றியும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என உரிய அதிகாரிகளிடம் வலியுறுத்துகின்றோம்.

இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் எவரெனினும், அவர்கள் கொண்டிருக்கக்கூடிய அரசியல் மற்றும் இராணுவத் தொடர்புகளுக்கு அப்பால் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதுமாத்திரமன்றி சாட்சியாளர்கள் மற்றும் விசாரணையாளர்களைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்." - என்றும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ)

# நான்கு மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 16

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி கண்டி, பதுளை, மாத்தளை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த எச்சரிக்கை அறிவிப்பானது முதலாவது கட்டத்தின் கீழ் அமுலில் இருக்கும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் எல்ல, பசறை, ஹாலிஎல, அப்புத்தளை பிரதேச செயலக பிரிவுகளுக்கும்,கண்டி மாவட்டத்தில் மெததும்பர, பாததும்பர பிரதேச செயலக பிரிவுகளுக்கும்,

குருநாகல் மாவட்டத்தில் ரிதீகம பிரதேச செயலக பிரிவுகளுக்கும்,

மாத்தளை மாவட்டத்தில் அம்பன்கஹ கோறளை, ரத்தொட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கும் இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது.

மேலும் அந்த அமைப்பு மெதுவாக உருவாகி மேற்கு வடமேற்கு நோக்கி நகரும். அதன்பின்னர் அடுத்த 2 நாட்களுக்கு வடக்கே தமிழக கடற்கரையை நோக்கி நகரும் வாய்ப்பு உள்ளது.

இந்த முறைமை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் எதிர்வரும் கணிப்புகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் பொதுமக்களை வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும்,

ஏனைய பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளையில் பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# மருந்துகள் விலையை முறையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 16

மருந்துகளின் விலையை முறையாக நடைமுறைப் படுத்தியதன் பின்னர் எதிர்காலத்தில் அவற்றைக் குறைந்த விலையில் விநியோகிப்பதற்கு எதிர்பார்ப்பதாகத் தேசிய ஔடதங்கள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

தற்போது மருந்து கொள்வனவு செய்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக தற்போது மருந்துகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் காலத்தில் மருந்து கொள்வனவு உள்ளிட்ட பிரச்சினைகள் நிவர்த்திக்கப்பட்டு அவற்றைக் குறைந்த விலையில் வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார். (அ)

# மகிந்தவின் பாதுகாப்புக்காக 60 பொலிஸ், 231 முப்படையினர்

## அமைச்சர் ஆனந்த விஜயபால

கொழும்பு, டிசெ. 16

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷக்கு 60 பொலிஸாரும் 231 முப்படையைச் சேர்ந்தவர்களும் பாதுகாப்புக்காக தற்போதும் உள்ளனர். ஆனால் எதிர்க்கட்சியினர் அதனை மறைத்து அவரது உயிருக்கு ஆபத்து என்று பொய்யான பிரசாரங்களைச் செய்து மக்களை திசை திருப்புவதற்கான சூழச்சியை முன்னெடுக்கின்றனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பு குறைக்கப்படுவது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் ஜனாதிபதிகளில் எந்த ஒருவரினதும் பாதுகாப்பு தொடர்பில் புலனாய்வு அறிக்கைகளின் பிரகாரம் பொலிஸாரே தீர்மானம் எடுக்கின்றார்கள். அந்த தீர்மானங்களில் கடந்த கால ஆட்சியாளர்கள் போன்று நாங்கள் தலையீடுகளைச் செய்வதில்லை.

அந்த வகையில் பொலிஸார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த 176 பொலிஸாரில் 16 பொலிஸை குறைத்து 60 பேரை வழங்கியுள்ளனர்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதிக்கு இராணுவத்தைச் சேர்ந்த 64 பேர் உள்ளடங்கலாக 231 முப்படைகளைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்புக்காக இன்னமும் உள்ளனர்.

ஆனால் அந்த விடயத்தினை எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் மறைத்துவிடுகின்றார்கள்.

மக்களை திசைதிருப்பும் சூழ்ச்சியுடன் தான் கருத்துக்களை வெளியிடுகின்றார்கள். அதேநேரம், அரசாங்கத்தினைப் பொறுத்தவரை பொதுக்கொள்கையொன்றையே கொண்டிருக்கிறது.

நாட்டின் தேசிய பாதுகாப்பையும், பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்கின்றபோது தனி நபர்களுக்கான பாதுகாப்புக்காக கோடிக்கணக்கில் செலவிட முடியாது.

அரசாங்கத்தில் உள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் கூட இன்னமும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பெற்றுக்கொள்ளாத நிலையில் உள்ளனர். ஆகவே, எம்மைப் பொறுத்தவரையில் எமது அரசாங்கத்தில் அரசியல்வாதிகள் பாதுகாப்பு விடயத்தில் தலையீடுகளைச் செய்வதில்லை. அதனை பொலிஸாரே இறுதி செய்கின்றார்கள்.

ஆகவே, அரசாங்கத்தின் மீது அரசியல் நோக்கத்துக்காக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது-என்றார். (அ)

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணையை சபையில் முன்வைக்கும் அவசியமில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 16

சபாநாயகர் பதவியிலிருந்து அசோக ரன்வல விலகியுள்ள நிலையில் அவருக்கு எதிராகக் கைச்சாத்திடப்பட்டுள்ள அவநம்பிக்கை பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அவசியமில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், ஒழுக்க நெறியை மீறியமை தொடர்பில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் பதவி விலகியுள்ளபோதிலும் தமது கல்வித் தகைமை தொடர்பில் இதுவரையில் உரிய வகையில் அவர் விளக்கமளிக்கவில்லை.

அதேநேரம், பட்டங்களைப் பெற்றுள்ளதாகப் போலியான தகவல்களைச் சமர்ப்பித்துள்ள மேலும் பலர் ஆளும் தரப்பில் உள்ளனர்.

கற்றவர்களை பாராளுமன்றத்துக்குக் கொண்டுவருவதாகக் கூறி, தேசிய மக்கள் சக்தி, பொய்யர்களை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இவ்வாறானவர்களைக் களையெடுப்பதற்கு, மீண்டுமொரு சிரமதானத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். (அ)

# இறக்குமதி அரிசியில் வண்டு மீள் ஏற்றுமதி செய்ய உத்தரவு

கொழும்பு, டிசெ. 16

தனியார் இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசித் தொகையில் பாவனைக்கு பொருத்தமற்ற 3 கொள்கலன்களில் இருந்த பெருமளவான அரிசியை மீள் ஏற்றுமதி செய்யுமாறு சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுமார் 75,000 கிலோ அரிசி இவ்வாறு பாவனைக்கு பொருத்தமற்றது என்பது தெரியவந்துள்ளது.

நாட்டுக்கு கொண்டு வரப்படும் அரிசி சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்னர் சுகாதார அமைச்சின் உணவு மற்றும் மருந்து பரிசோதகர்களால் சோதனை மேற்கொள்ளப்படும்.

அதன்படி, பரிசோதனைகளின் போது, இறக்குமதி செய்யப்பட்ட 3 கொள்கலன்களில் இருந்த 75000 கிலோ அரிசி பாவனைக்கு பொருத்தமற்றது என்பது தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ராவிஸ் ஹெட், ஸ்டீவன் சுமித் சதம் 400 ஓட்டங்களை கடந்தது ஆஸி அணி




பிரிஸ்பேன், டிசெ. 16

ட்ராவிஸ் ஹெட் 152, ஸ்டீவன் சுமித் 101 ஓட்டங்கள் அடித்து கொடுத்த நிலையில் அவுஸ்திரேலிய அணி, 7 விக்கெட்கள் இழப்புக்கு 405 ஓட்டங்கள் குவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் பெர்த்தில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியாவும், அடிலெய்டில் நடைபெற்ற 2ஆவது போட்டியில் அவுஸ்திரேலியாவும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் உள்ள காபா மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடி வருகிறது. அந்த அணி 5. 3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது திடீரென மழை குறுக்கிட்டது. இதனால் போட்டி பாதிக்கப்பட்டது.

அரை மணி நேரத்துக்குப் பிறகு மீண்டும் போட்டி தொடங்கியது. ஆட்டத்தின் 13ஆவது ஓவரை ஆகாஷ் தீப் வீசினார். அப்போது மீண்டும் மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் மீண்டும் தடைப்பட்டது. மழை விடாமல் தொடர்ந்து பெய்தது. இதனால், முதல் நாள் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக நடுவர்கள் அறிவித்தனர்.

அப்போது, அவுஸ்திரேலிய அணி 13. 2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 28 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்த நிலையில், 2ஆவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

உஸ்மான் கவாஜா 21 ஓட்டங்களுடனும், மெக்ஸ்வீனி 9 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து களமிறங்கிய லபுசனே 12 ஓட்டங்களில் வெளியேறினார்.

அடுத்ததாக ஸ்டீவன் சுமித் மற்றும் ட்ராவிஸ் ஹெட் ஆகியோர் ஜோடி சேர்ந்தனர். நிதானமாக ஓட்டம் சேர்ந்த இந்த ஜோடியில் ஸ்டீவன் சுமித் தனது அரைச் சதத்தை பதிவு செய்தார்.

இந்த நிலையில், அடிலெய்ட் டெஸ்ட் போட்டியைத் தொடர்ந்து காபாவிலும் இந்திய அணிக்கு எதிராக அவுஸ்திரேலியா வீரர் ட்ராவிஸ் ஹெட் சதம் விளாசினார். முன்னதாக இந்த மைதானத்தில் கடந்த 3 இன்னிங்ஸ்களில் ட்ராவிஸ் ஹெட் ( 0(1), 0 (1), 0 (1) ) முதல் பந்தில் ஆட்டமிழந்திருந்தார்.

ஆனால், இந்தப் போட்டியில் 152 ஓட்டங்களைக் குவித்து இந்திய அணிக்குப் பெரும் நெருக்கடி கொடுத்தார். மறுமுனையில் ஸ்டீவன் சுமித் 101 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்த இருவரும் இணைந்து அவுஸ்திரேலிய அணிக்கு முதல் இன்னிங்ஸில் சிறப்பான அடித்தளத்தை அமைத்து கொடுத்துள்ளனர். இதனால் அந்த அணி நேற்றைய நாள் ஆட்டநேர முடியில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 405 ஓட்டங்கள் குவித்து வலுவான நிலையில் உள்ளது. (எ)

## 3 ஆவது போட்டியில் வெற்றி ரி-20 தொடர் ஆப்கான் வசம்




ஹராரே, டிசெ. 16

3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் அணி கைப்பற்றியது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ரி - 20 தொடர் நடைபெறுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ரி - 20 போட்டியில் சிம்பாவே அணியும், 2ஆவது போட்டியில் ஆப்கானிஸ்தானும் வெற்றி பெற்றன.

இந்த நிலையில், தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி ஹராரேவில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாபே 19. 5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 127 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

அந்த அணி சார்பில் அதிகபட்சமாக பிரையன் பென்னட் 31 ஓட்டங்கள் எடுத்தார். ஆப்கானிஸ்தான் தரப்பில் ரஷித் கான் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 128 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணியும் விக்கெட்களை இழந்து திணறியது.

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணி இறுதியில் 19. 3 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழந்து 128 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் கைப் பற்றியது. (எ)

## 7 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி

டர்பன், டிசெ.16

பாகிஸ்தா னுக்கு எதி ரான 2 ஆவது ரி - 20 போட்டியில்தென்னா பிரிக்க அணி 7 விக்கெட் கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.தென்னா பிரிக்கா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே சென்சூரியன் மை தானத்தில் நடைபெற்ற 2ஆவது ரி - 20 போட்டியில் பாகிஸ்தான் எடுத்த 206 ஓட்டங்கள் இலக்கை தென்னாபிரிக்க அணி விரட்டி அடித்து 19. 3 ஓவர்களில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்தோடு, 3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரை 2 - 0 என்று தென்னாபிரிக்க அணி கைப்பற்றியதுரீசா ஹென் றிக்ஸ் சர்வதேச கிரிக்கெட் போட்டிக்கு வந்து 10 ஆண்டு கள் ஆகிறது, ஆனால் இப்போதுதான் அவர் தன் முதல் ரி - 20 சதத்தை பதிவு செய்துள்ளார். (எ)



## வெறும் 143 ஓட்டங்களுக்கு சுருண்டது இங்கிலாந்து

### இமாலய இலக்கை நோக்கி நியூசிலாந்து

ஹாமில்டன், டிசெ. 16

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து இமாலய இலக்கை நிர்ணயிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகள் இடையிலான கடைசி மற்றும் 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹாமில்டன் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ரொம் லேதம், வில் யங் ஜோடி சிறப்பான தொடக்கம் அமைத்துக் கொடுத்தது. 30. 3 ஓவர்களில் 105 ஓட்டங்கள் சேர்த்த இந்த ஜோடியை கஸ் அட்கின்சன் பிரித்தார். வில் யங் 92 பந்துகளில், 10 பௌண்டரிகளுடன் 42 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

தனது 31ஆவது அரைச் சதத்தை கடந்த ரொம் லேதம் 135 பந்துகளில், 9 பௌண்டரிகளுடன் 63 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் மேத்யூ பாட்ஸ் பந்து வீச்சில் வெளியேறினார். இதன் பின்னர் நியூசிலாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை பறிகொடுத்தது. கேன் வில்லியம்சன் 44, ரச்சின் ரவீந்திரா 18, டேரில் மிட்செல் 14, ரொம் பிளண்டெல் 21, கிளென் பிலிப்ஸ் 5, மேட் ஹன்றி 8. ரிம் சௌதி 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் அதிரடியாக விளையாடி அரைச்சதம் அடித்தார் மிட்செல் சாண்ட்னர்.

முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் நியூசிலாந்து அணி 82 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 315 ஓட்டங்கள் குவித்தது. மிட்செல் சாண்ட்னர் 54 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 7 பௌண்டரிகளுடன் 50 ஓட்டங்களும், வில் ஓ"ரூர்க் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர். இங்கிலாந்து அணி சார்பில் மேத்யூ பாட்ஸ், கஸ் அட்கின்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், பிரை டன் கார்ஸ் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். கைவசம் ஒரு விக்கெட் இருக்க 2ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய நியூசிலாந்து அணி 347 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 143 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனையடுத்து நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 136 ஓட்டங்கள் எடுத்து விளையாடி வருகிறது. அத்தோடு, இங்கிலாந்து அணியைவிட 340 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. இதனால் நியூசிலாந்து அணி இமாலய இலக்கை நிர்ணயிக்கும் வாய்ப்பு ஏற்பட் டுள்ளது. (எ)

## குல்புதீன் நைப்பிற்கு ஐ. சி. சி. அபராதம்

டுபாய், டிசெ. 16

ஆப்கானிஸ்தான் வீரர் குல்புதீன் நைப்பிற்கு ஐ. சி. சி. அபராதம் விதித்துள்ளது.

சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி 3 ரி - 20, 3 ஒருநாள் போட்டிகள், 2 டெஸ்ட் போட் டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.



இரு அணிகளுக்கும் இடையேயான 2ஆவது ரி - 20 ஹராரேவில் நடைபெற்றது.

இந்த ஆட்டத் தின்போது நடுவருக்கு எதிராக பேசியதற்காக ஆப்கானிஸ்தான் வீரர் குல்புதீன் நைப்பிற்கு போட்டி கட்டணத்தில் 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஜப்பானை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது இந்திய அணி




மஸ்கட், டிசெ. 16

மகளிர் ஜூனியர் ஆசிய கிண்ண ஹொக்கி போட்டித் தொடரில் ஜப்பானை வீழ்த்தி இந்திய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

9ஆவது மகளிர் ஜூனியர் ஆசிய கிண்ண போட்டி (21 வயதுக்குட்பட்டோர்) ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 10 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதின. லீக் சுற்று முடிவில் "ஏ" பிரிவில் சீனா (4 வெற்றியுடன் 12 புள்ளி) முதலிடமும், இந்தியா (3 வெற்றி, ஒரு தோல்வியுடன் 9 புள்ளி) 2ஆவது இடமும், "பி" பிரிவில் ஜப்பான் (12 புள்ளி) முதலிடமும், தென் கொரியா (9 புள்ளி) 2ஆவது இடமும் பிடித்து அரையிறுதிக்கு முன்னேறின.

இதில் முதலாவது அரையிறுதியில் நடப்பு சம்பியன் இந்திய அணி, ஜப்பானை எதிர்கொண்டது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி 3 - 1 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கக்கடலில்...

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும், ஏனைய பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளையில் பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரை பலத்த மழை பெய்யக்கூடும்.

அதேவேளை, மத்திய, சப்ரகமுவ, மற்றும் தென் மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழையுடன் கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் அபாயத்தைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

## சமஷ்டி...

கொண்டுவரப்பட்ட காலத்தை விட நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது

இலங்கையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் புதிய அரசாங்கத்திற்கு அண்மையில் வழங்கப்பட்ட மக்கள் ஆணையானது முழுமையான முறைமை மாற்றத்திற்கு அழைப்பு விடுத்துள்ளமை, வழமை போன்று வியாபாரம் இனி சாத்தியமில்லை என்பதை உணர்த்துகிறது.

இலங்கையில் இனப்பிரச்னைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று ஒற்றையாட்சி அமைப்பு. இலங்கையின் அரசியலமைப்பின் 13 வது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, மாநிலத்தின் கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரை, அர்த்தமுள்ள சுயாட்சி மற்றும் சுயராச்சியத்தை அடைய முடியாது என்ற அடிப்படையில் தமிழர்கள் அதை நிராகரித்தனர்.

இதேவேளை, நாட்டின் உயர்நீதிமன்றங்களில் இருந்து 30 க்கும் மேற்பட்ட நீதித்துறை தீர்ப்புகள் உள்ளன, அவை அரச கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரை கொழும்பில் உள்ள அரசாங்கம் அனைத்து அதிகாரங்களின் ஒரே களஞ்சியமாக இருக்கும் மற்றும் குறிப்பாக அதிகாரப் பகிர்வுக்கு எதிராக உள்ளது - என்றுள்ளது. (அ)

## தமிழரசு...

விவாதித்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் போதே அது வலுவானதாகவும் பலமானதாகவும் இருக்கும். அதன் மூலமே புதிய அரசியல் சாசனத்தில் எவ்வாறான கோரிக்கையை முன்வைக்கலாம் என்ற கடமைப்பாட்டை நாம் செய்யமுடியும்.

தமிழரசுக்கட்சி கூடுதலான ஆசனங்களை பெற்றுவிட்டது என்பதற்காக அவர்கள் எடுக்கின்ற முடிவுக்கு ஏனையவர்கள் ஒத்துவரவேண்டும் என்று சொல்வது முறையற்ற செயல். தேர்தல் வெற்றிகளை வைத்து இதனை பார்க்க முடியாது.

ஒற்றுமையான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கின்றபோதே எமது மக்களும் அதை விரும்புவார்கள். அந்த பலத்தின் மூலமே அரசாங்கத்தின் பார்வையை எமது பக்கம் திருப்ப முடியும்.தனித்தனியாக செயற்பட்டால் அதை வைத்து அரசியல் செய்யும் நிலையில் புதிய அரசு ஈடுபடும்.

பிரிந்து சென்றதால் நாம் பல பாடங்களை கற்றிருக்கிறோம். எனவே நாங்கள் செய்வோம் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வது சாத்தியற்ற ஒன்றாகவே நான் பார்க்கிறேன். சுமந்திரனுக்கும் இது நன்றாக தெரியும். அவரும் ஒத்துவருவார் என்று நினைக்கிறேன். தமிழரசுக்கட்சியும் ஒத்துவரும் என்று நினைக்கிறேன் - என்றார். (அ)

## ஜனாதிபதி...

வலயத்தின் மேலதிக செயலாளர் புனித் அகர்வால், இந்திய உபசரணைப் பிரதானி அன்ஷுமன் கவூர் உள்ளிட்ட இராஜதந்திரிகள் ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் சிறப்பு வரவேற்பளித்தனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் விஜயம் தொடர்பில் இந்திய ஊடகங்கள் சிறப்பாக பிரசாரம் செய்திருந்ததுடன், புதுடில்லி நகரின் பிரதான சுற்றுவட்டாரத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் நரேந்திர மோடியின் புகைப் படங்கள் அடங்கிய பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் உள்ளிட்டவர்களை நேற்று இரவு சந்தித்து கலந்துரையாடினார். (அ)

## இந்தியாவுக்கு...

பிரதமர் நரேந்திர மோடியுடனான இருதரப்பு சந்திப்பில் முக்கிய விடயங் கள் குறித்து கலந்துரையாடப்படவுள் ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, துணை ஜனாதிபதி ஸ்ரீ ஜக்தீப் தன்கர், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், இந்திய சுகாதார அமைச்சர் ஜே.பி.நட்டா, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் உள்ளிட்ட இராஜதந்திரிகள் பலருடனும் கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் முதலீடு மற்றும் வணிகம் தொடர்புகளை பலப்படுத்தும் நோக்கில் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் வர்த்தகர்களுடனான சந்திப்பிலும் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார்.

அடுத்தபடியாக ஜனாதிபதி புத்த காயாவுக்கான சுற்றுப்பயணம் ஒன்றையும் மேற்கொள்ளவுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ உள்ளிட்டோரும் இந்த சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்டுள்ளனர். (அ)

## மீனவர்கள்...

இலங்கைக்கான தூதரகத்தின் பங்களிப்புடன் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு முள்ளியவளையில் மாபெரும் நத்தார் விழா இடம் பெற்றது.

குறித்த நிகழ்வின் பின்னர் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பல திட்டங்களில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களுக்கு ஆதரவாக மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம் சம்பந்தமான திட்டங்களும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை ஜனாதிபதி இந்தியா பயணிக்கின்றார். அங்கு தங்கியிருந்து இலங்கை சம்பந்தமான பல திட்டங்கள் தொடர்பான அறிவிப்பை எதிர்பார்க்கலாம். அதில் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் சேர்ந்த பல திட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஒக்ரோபர் மாத இறுதியில் மீனவர் பிரச்னை குறித்து பெரியளவிலான கூட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. அதில் இலங்கை தொடர்பான அதிகாரிகள் சந்தித்திருக்கிறார்கள். ஆனால் மீனவர்கள் நேரில் சந்திப்பது இதுவரை நடைபெறவில்லை. அது இடம்பெறுமாயின் பல பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும் - என்றார். (அ)

## மாகாண...

நான்கு வகையான அணுகுமுறை களைக் கையாள வேண்டுமென்று நாங்கள் கூறுகின்றோம். முதலாவது நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவாகவுள்ள பிரச்சினைகள். அவை வேலை வாய்ப்பு, விலைவாசி உயர்வு, போதை வஸ்துப் பாவனை என்பனவாக அமையலாம்.

முதலில் அந்த பிரச்னைகளில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டும். அதற்கான தீர்வை வழங்கும் போது பல்வேறு பிரச்னைகள் தீர்ந்து விடும். ஆகவே இவற்றில் இருந்து நாம் மக்களை மீட்டெடுக்க வேண்டும்.

இப்பிரச்னைகளுக்கான தீர்வு இது நாள் வரைக்கும் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்குக்கென தனித்தனியாக இருந்து வந்துள்ளது. எனவே முதலாவதாக இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் போது பல்வேறு பிரச்னைகள் தீர்த்து வைக்கப்படும்.

இரண்டாவதாக, தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் தனித்துவமான பிரச்னை. தமிழர் என்ற காரணத்தினால் அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறை, மொழி ரீதியிலான பாகுபாடு போன்றவற்றில் இருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்க தேவையான நடவடிக்கைகைள மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு உதாரணமாக 99 சதவீதமான தமிழ் மக்கள் வாழ்கின்ற வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணத்தில், தமிழ் பொலிஸ் உயரதிகாரிகளோ, குறைந்த பட்சம் தமிழ் பொறுப்பதிகாரி கூட யாழ். மாவட்டத்தில் கிடையாது. இது போன்ற பிரச்னைகள் இங்கு காணப்படுகின்றன.

அத்துடன் இன்று அரசாங்கத் திணைக்களங்களுக்குச் சென்று தமிழில் முறைப்பாடு கடிதமொன்றைக் கூட வழங்க முடியாத நிலையே உள்ளது. தமிழர்கள் என்ற உணர்வோடு, அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இவையனைத்தும் தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் தனித்துவமான பிரச்னைகள். எனவே இந்த பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என்ற விடயத்தில் நாம் தெளிவாகவுள்ளோம். அவற்றை தீர்ப்போம்.

மூன்றாவதாக மாகாண சபை தேர்தலை அடுத்த வருடம் நடத்துவோம். மாகாணசபை தேர்தல் தொடர்பாக பலரும் பலவிதமான கருத்துக்களை கூறுகின்றார்கள். அவை ஏற்றுக் கொள்ள முடியாத கருத்துக்கள் ஆகும்.

13ஆவது திருத்தச் சடடத்தின் கீழ் உள்ள மாகாணசபை தேர்தலை நாங்களும் உள்வாங்கிக் கொண்டிருக்கின்றோம். அந்த வகையில் மாகாண சபை தேர்தலும் நடத்தப்படுகின்றது.

நான்காவதாக புதிய அரசியல் அமைப்பாகும். இந்த நாட்டில் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு சட்ட மூலங்கள் அனைத்தும் இதுவரை காலமும் ஆட்சி செய்த ஆளுந்தரப்பினரின் விருப்பமாகவே இருந்திருக்கின்றதே தவிர மக்களுடைய விருப்பம் அல்ல. எனவே மக்களுடைய விருப்பத்தை உள்வாங்கி ஓர் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

அதற்காக நாட்டில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவர் உட்பட நாட்டில் வாழும் அனைத்து இன மக்களின் புத்திஜீவிகளின் கருத்துக்களை உள்வாங்கி நீண்டு நிலைக்கக் கூடிய ஒரு நிரந்தரமான அரசியல் அமைப் பொன்றே எமக்கு தேவையாகவுள்ளது.

அதன்படி, 2015ஆம் 2019ஆம் ஆண்டுகளில் விவாதிக்கப்பட்டு இன்று கைவிடப்பட்டுள்ள இந்த அரசியலமைப்பை கவனத்திற்கொண்டு அதில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை மேற்கொண்டு

இலங்கை மக்களின் அரசியலமைப்பாக உருவாக்குவதே எமது நோக்கமும் அணுகுமுறையுமாகும் - என்றார். (அ)

## சிறீதரன் எம்.பி...

அரசியல் சூழல்கள், தமிழ் மக்களின் நெருக்கடிகள் உள்ளிட்ட பலவிடயங்கள் தொடர்பாக பேசப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேடிய பிரதியமைச்சருடனான சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனும் பங்கேற்கவுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் கனடாவில் தங்கியிருக்கவுள்ள சிறீதரன் அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து உரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## காங்கேசன்...

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் சுபம் குறூப் ஒப் கம்பனிஸ் பல்வேறு வியாபார நிறுவனங்களை உள்ளடக்கியதொன்றாகும். குறிப்பாக, தனிமனிதனின் தலைமைத்துவத்தில் 500இற்கும் மேற்பட்ட பாரவூர்தி போக்குவரத்து சேவையை வழங்குவதாக இருக்கின்றது.

அத்துடன் எமது பிறதொரு நிறுவமான சுபம் நிறுவனம் காங்கேசன்துறை, நாகைப்பட்டினத்துக்கு இடையிலான படகுசேவையில் முதலீடுகளைச் செய்துள்ளது. இதனையடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் இந்த படகுசேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும் காலநிலை முன்னெச்சரிக்கையின் காரணமாக தற்காலிகமாக சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இம்மாதம் 23ஆம் திகதி வங்களா விரிகுடாவில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகுவதற்கான நிலைமைகளும் உள்ளன. இதனால் 19ஆம் திகதி மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடாகியிருந்த படகு சேவையை சிறிய காலத்திற்கு ஒத்திவைத்துள்ளோம்.

இந்த நிலையில் எதிர்வரும் ஜனவரியில் மீண்டும் காங்கேசன்துறைக்கும் நாகைப்பட்டனத்துக்கும் இடையிலான படகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதோடு இதனை சுபம் நிறுவனமே நேரடியாக கையாளப்போகின்றது.

தற்போது இருவழிக் கட்டணமாக 9700 இந்திய ரூபாய் அறவிடப்படுகின்றது. அதனை நாம் 8500 இந்திய ரூபாயாக மாற்றியமைப்பதோடு பத்து கிலோகிராம் எடையுடைய பொதியையும் இலவசமாகக் கொண்டுவர முடியும்.

மேலதிகமாக அதிக எடையுடைய பொதிகளை கொண்டுசெல்வதாக இருந்தால் அதற்கான மேலதிக கட்ட ணங்களை செலுத்த வேண்டியுள்ளது. அதற்கான தொகைகள் எமது உத்தியோகபூர்வமான இணைதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. பயணப்பொதி களுக்கான முற்பதிவுகளை இணையத் தின் ஊடாக மட்டுமே மேற்கொள்ள முடியும்.

இதற்கான தொகை இந்திய ரூபாவில் 15ஆயிரமாக காணப்படுவதோடு இலங்கை ரூபாவில் 50ஆயிரம் வரையில் இருக்கின்றது. இவ்விதமான திட்டங்கள் நடுத்தர பயணிகளை மையப்படுத்திய தாகவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணம் இயற்கை வளங்கள் நிறைந்ததாக காணப்படுகின் றது. பிரசித்தி பெற்ற சமயத் தலங்கள், வரலாற்று இடங்கள், கலாசார முக்கியத்துவ பகுதிகள் உள்ளிட்ட பல தரப்பட்ட சிறப்புகளை கொண்டிருக்கின்றன.

சுற்றுலாப் பயணிகளை இந்தப்பகுதிகள் மிகவும் கவர்ந்தவையாக இருக்கின்றன என்பதை எம்மால் உறுதியாகக்கூற முடிகின்றது.

ஆகவே குறைந்த செலவில் சுற்றுலாப் பயணிகள் பயணங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளதோடு தொடர்ச்சியான படகு சேவையை முன்னெடுப்பதற்கும் தீர்மானித்துள்ளோம் - என்றார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையின் அபிவிருத்திக்கு தொழிநுட்பம், நிதி உதவிகள்!

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 16

**இலங்கையின் அபிவிருத்திக்கு தொழிநுட்ப உதவி மற்றும் நிதியுதவி தொடர்ந்து வழங்கப்படும் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரே பிரன்ச் தெரிவித்துள்ளார்.**

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவை சந்தித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நீண்ட காலமாக இந்நாட்டு அரசாங்கத்துடனும் மக்களுடனும் இணைந்துள்ள பங்காளித்துவத்தை மேலும் வலுப்படுத்தவுள்ளதாகவும் எதிர்காலத்திலும் அதனைத் தொடரப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த தேர்தலில் பெரும் ஆணை வழங்கப்பட்ட நிலையில், பொதுமக்களின் எதிர்பார்ப்புகளும் அதிகமாக இருப்பதால் எதிர்வரும் காலப்பகுதி சவாலானதாக அமையும் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# யாழ்.நகரை அண்மித்துள்ள பூட் சிற்றிகளில் திருட்டுகள்!

கொழும்பு, டிசெ. 16

யாழ்ப்பாணம் நகர் பகுதிகளை அண்மித்துள்ள பூட் சிற்றிகளில் திருட்டுக்களில் ஈடுபடும் கும்பல்கள் தொடர் பான தகவல் கிடைத்தால் அறியத்தருமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

பூட் சிற்றிகளுக்கு மூவர் அடங்கிய கும்பலாக சென்று, அங்கு பொருட்களை வாங்குவது போல பல பொருட்களை திருடி, தமது ஆடைகளுக்குள் மறைத்து எடுத்து செல்வது அங்குள்ள கண்காணிப்பு கமெராக்களில் பதிவாகியுள்ளது.

இக் கும்பல் தொடர்ச்சியாக இவ்வாறான திருட்டுக்களில் ஈடுபட்டு வருவதால், அவர்கள் தொடர்பான தகவல்கள் அறிந்தால், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர். (அ)

# யாழில் இராணுவத்தினரின் பிடியிலுள்ள நிலங்கள் படிப்படியாக விடுவிக்கப்படும்!

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தின் பிடியில் காணப்படும் 2 ஆயிரத்து 624.29 ஏக்கர் நிலப் பரப்பு எதிர்வரும் காலங்களில் படிப்படியாக விடுவிக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

தற்போது படையினரிடம் உள்ள காணிகள் 2025ஆம் ஆண்டு முதல் படிப்படியாக விடுவிக்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்காக இந்த வருடம் ஆயிரத்து 303.42 மில்லியன் ரூபா நிதி செலவழிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# பதில் அமைச்சர்கள் நியமனம்!

கொழும்பு, டிசெ. 16

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற நிலையில் 05 அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, பதில் டிஜிற்றல் பொருளாதார அமைச்சராக, டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்ன, பதில் பாதுகாப்பு அமைச்சராக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, நிதி மற்றும் திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா பதில் அமைச்சராக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா, பதில் தொழில் அமைச்சராக, பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜயசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# பருத்தித்துறையில் எலிக்காய்ச்சல் தாக்கம் வெகுவாகக் குறைவடைவு

யாழ்ப்பாணம், டிசெ. 16

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எலிக் காய்ச்சல் எனச் சந்தேகிக்கப் பட்டு சேர்க்கப்படுபவர்களின் எண்ணிகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

ஓரிரு தினங்களில் வைத்தியசாலையில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்து நிலைமை சரியா கிவிடும் என்று வைத்தியர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

மக்கள் தற்போது முன்னெடுக்கப்படும் தடுப்பு நட வடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். காய்ச்சல் அறி குறிக்கான ஆரம்பத்திலேயே வைத்தியசாலைக்கு வர வேண்டும். சிகிச்சை எடுக்க வேண்டும். இதன்மூலம் நோய் தீவிரமாகுவதையும், இறப்பு ஏற்படுவதையும் தடுக்கலாம், குறைக்கலாம்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இது வரை 66 பேர் எலிக்காய்ச்சல் நோய் அறிகுறிகளுடன் வந்து சிகிச்சை பெற்றுள்ளார்கள். தற்போது 32 நோயாளர்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுகின்றார்கள். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார் - என்றனர். (அ-2)

# தனது கழுத்தை தானே அறுத்த குடும்பப்பெண்!

## தொட்டிலடிப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 16

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் - தொட்டிலடிப் பகுதியில் இளம் குடும்பப் பெண்ணொருவர் தனது கழுத்தை தானே கூரிய ஆயுதத்தால் வெட்டியுள்ளார்.

இதனால் குறித்த பெண்ணின் கழுத்தில் காயம் ஏற்பட்ட நிலையில் சங்கானை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அராலி பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு தனது கழுத்தை தானே காயப்படுத்தியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பெண் மனநலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார் என அறியமுடிகிறது.

மானிப்பாய் பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-05)

தர்மபுரம் பகுதியில்

# பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய மூன்று பேர் கைது!

கிளிநொச்சி, டிசெ. 16

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய குற்றச்சாட்டில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-35 பிரதான வீதி சுண்டிகுளம் சந்தி விஸ்வமடு பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளில் தலைக் கவசம் அணியாது மூவர் சென்றுள்ளனர்.

இதன்போது வீதிச் சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை சோதனை இடுவதற்கு முற்பட்டனர். இந்நிலையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் தமது கையில் இருந்த கண்ணாடிப் போத்தலால் பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கியுள்ளார்.

தாக்கியதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மூன்று சந்தேக நபர்களும் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் தடயப் பொருட்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (அ)

# கட்டுநாயக்க விமானநிலையம் சர்வதேச தரத்தில் அபிவிருத்தி!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, டிசெ. 16

"சர்வதேச விமான நிலைய அமைப்புகளுக்கு ஏற்ப கொழும்பு, கட்டுநாயக்க விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படும்" என சிவில் விமான சேவைகள், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். விமான நிலைய வளாகத்தில் கண் காணிப்பு விஜயமொன்றை மேற்கொண் டிருந்தபோதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாகவே பலர் நாட்டிற்குள் பிரவேசிக்கின்றார் கள். பயணிகளின் வருகைக்கேற்ப விமான நிலையத்தில் தங்கியிருப்பதற்கான வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றது.



அவற்றை நிவர்த்தி செய் வதற்கான யோசனை திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும் கடந்த 2023ஆம் ஆண்டில் இந்த அபிவிருத்தி திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது. சுமார் 15 மில்லியன் பயணிகளை உள்வாங்குவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தற்போது 2028 ஆம் ஆண்டளவிலேயே அதனை நிறைவு செய்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. கட்டுநாயக்க விமானநிலையத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும்.

இலங்கையின் சுற்றுலாத்துறையை பொருத்தவரை பண்டாரநாயக்க விமான நிலையம் முக்கிய இடமாகப் பார்க்கப் படுகின்றது - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org